# செம்மணியும், இலங்கையின் பொறுப்புக்கூறல் நெருக்கடியும்

# ஓர் பரீட்சை



அடையாளம்
கொள்கை ஆய்வுக்கான நிலையம்

Adayaalam Centre for Policy Research

சூழ்நிலைச் சுருக்கக் குறிப்பு எண் 7

# செம்மணியும், இலங்கையின் பொறுப்புக்கூறல் நெருக்கடியும்

# ஓர் பரீட்சை

**ஒக்டோபர் 2025**

**ஒளிப்படங்கள்:** குமணன் கணபதிப்பிள்ளை

அடையாளம்
கொள்கை ஆய்வுக்கான நிலையம்

# உள்ளடக்கம்

1. **அறிமுகம்** **2**

2. **செம்மணி: கடந்த காலமும், நிகழ்காலமும்** **5**

3. **முக்கிய கரிசனைகள்: திட்டமிட்ட, முறைமையான உரிமை மீறல்கள்**

1) அச்சுறுத்துதலின் ஊடும், கண்காணிப்பின் ஊடும் விலக்கி வைத்தல் 9

2) பண்பாட்டிற்கு ஏற்படும் தீங்கும், தகவல் கட்டுப்பாடும் 13

3) தொழினுட்பத் தோல்விகளும், குற்றவழக்குத் தொடர்வதிலுள்ள வெற்றிடமும் 17

4. **குற்றம் இழைத்தவர்கள் தண்டனையில் இருந்து விலக்குப் பெற்றிருக்கும் நிலையில் இருந்து, பொறுப்புக்கூறலை நோக்கி: நீதிக்கான ஓர் வழிகாட்டி வரைபடம்**

1) சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் 20

2) சர்வதேசத் தொழினுட்ப உதவியும், ஆற்றலை விருத்தி செய்து மேம்படுத்துதலும் 23

3) உண்மையும், திட்டமிட்டு, முறைமையாகச் செய்யப்பட்ட மீறல்களிற்கான அங்கீகாரமும் 25

4) பயனுள்ள வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பங்கேற்பும், அவர்களுக்கான பாதுகாப்பும் 26

5) உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் தேவையும், இது மீண்டும் நிகழாமையை உறுதிசெய்தலும் 27

6) விரிவான சர்வதேசப் பொறுப்புகள் 28

5. **முக்கியமான பரிந்துரைகள்** **29**

6. **முடிவுரை** **31**

## 1. அறிமுகம்

**"எங்களுக்குப் பொறுப்புக்கூறப்பட வேண்டும். நாங்கள் என்புக்கூடுகள் பற்றியோ அல்லது அவை தொடர்பான சமயச் சடங்குகள் பற்றியோ கவலைப்பட விரும்பவில்லை. உண்மையில் நாங்கள் வேண்டுவது பொறுப்புக்கூறலை மட்டுமே."**

**காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய்[1]**

செம்மணி என்பது வெறுமனே ஓர் அகழ்வுச் செயற்பாடு இடம்பெறும் தளமல்ல; அது ஆதாரங்களின் தளமும் ஆகும். 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், செம்மணியில் அமைந்துள்ள அரியாலை-சித்துப்பத்தி இந்து மயான வளாகத்தில் இடம்பெற்ற கட்டுமானச் செயற்பாடு ஒன்றின் போது, என்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.[2] இத்தளமானது 2025 ஆம் ஆண்டு ஜீன் மாதத்தில் உத்தியோகபூர்வமாக ஓர் மனிதப் புதைகுழியாக அறிவிக்கப்பட்டது.[3] அகழ்வுச் செயற்பாடுகள் இரண்டு கட்டங்களில் இடம்பெற்றன. முதலாவது கட்டத்தில் ஒன்பது நாட்களும், இரண்டாவது கட்டத்தில் நாற்பத்தைந்து நாட்களும் என மொத்தமாக ஐம்பத்து நான்கு நாட்கள் அகழ்வுச் செயற்பாடுகள் இடம்பெற்றன. 2025 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆறாம் திகதிக்குள், இரண்டாம் கட்ட அகழ்வின் முடிவில், சிசுக்கள், நடைக்குழந்தைகள், சிறுபிள்ளைகளது என்புக்கூடுகள் உள்ளிட்ட இருநூற்று நாற்பது என்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுள் தொண்ணூறு வீதத்திற்கும் அதிகமான என்புக்கூடுகளுடன் ஆடைகள் இணைந்து காணப்படவில்லை.[4] இவற்றுடன் ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்கப்பட்ட பாடசாலைப் பை ஒன்று, குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள், பால் போத்தல்கள் போன்ற பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இம்மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டமையானது, செம்மணியை, மீட்கப்பட்ட எச்சங்களின் அளவின் அடிப்படையில் இலங்கையின் இரண்டாவது பெரிய மனிதப் புதைகுழியாக மாற்றியுள்ளது.[5] காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைப் பொறுத்தவரை இந்த அகழ்வுச் செயற்பாடுகள் வெறுமனே ஓர் தடயவியல் நடவடிக்கை அல்ல. மாறாக, தனது கடந்த காலத்தை

[1] காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான சங்கம் ஒன்றின் செயலாளராகத் தற்போது பணியாற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

[2] அரியாலை-சித்துப்பத்தி இந்து மயான முகாமைத்துவக் குழு உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

[3] மனிதப் புதைகுழிக்கான வரையறை: "ஓர் மனிதப் புதைகுழியானது, அங்கு நிலவும் "மரணம் மற்றும் /அல்லது உடல் அகற்றல் முறையைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அவற்றின் சட்டபூர்வமான தன்மை குறித்து விசாரணை ஒன்றைக் கோருவதாக இருக்கும்," ஓர் அடக்கத் தளமாகும். அக்னஸ் கல்லமார்ட்டின் *நீதிக்குப் புறம்பாக நிறைவேற்றப்படும் அல்லது உடனடியாக நிறைவேற்றப்படும் அல்லது எதேச்சையாக நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் பற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை: உலகம் முழுவதும் காணப்படும், வரலாற்றின் பல்வேறு காலப்பகுதிகளைச் சேர்ந்த, பெரும் மனிதப் படுகொலைகளும், சட்டத்துக்குப் புறம்பான மரணங்களும் இடம்பெற்ற ஏராளமான இடங்களை முனைப்புறுத்தும், மனிதப் புதைகுழிகள்*, UN Doc.A/75/384, ஒக்டோபர் 2020, பத்தி -12., இனைப் பார்க்கவும்.

[4] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் செம்மணியிலுள்ள மனிதப் புதைகுழி தொடர்பில் தற்போது இடம்பெற்றுக்கொண்டு இருக்கும் விசாரணை பற்றிய அறிக்கை, செப்டெம்பர் 2025, பக்கம் 4, https://www.hrcsl.lk/wp-content/uploads/2025/09/Fact-Finding-Report-of-HRCSL-on-Chemmani-Mass-Grave-Site.pdf எனும் இணைப்பில் கிடைக்கிறது.

[5] தற்போது தோண்டி எடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய மனிதப் புதைகுழித் தளம், 2018 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட மன்னார் சதொச மனிதப் புதைகுழித் தளமாகும். அங்கு முந்நூறுக்கும் அதிகமான என்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

எதிர்கொள்வதற்கும், தனக்குள்ள சட்டக் கடப்பாடுகளை நிலைநிறுத்தி உறுதி செய்வதற்கும் இலங்கை அரசுக்குள்ள விருப்பத்தையும், அதற்காக அதனிடமுள்ள திறனையும் மதிப்பீடு செய்வதற்கான ஓர் பரீட்சையாகும். ஆனால், பல பத்தாண்டுககளாக நிலவும் நிரூபிக்கப்பட்ட நிறுவன இயலாமை, புலனாய்வு அமைப்புகளிலுள்ள கட்டமைப்பு ரீதியான அக்கறை முரண்பாடுகள், முந்தைய மனிதப் புதைகுழி தொடர்பான வழக்குகளில் பொறுப்புக்கூறலைத் தடுத்த தொடர்ச்சியான இடையூறுகள் போன்றவை இப்பரீட்சையைச் சிக்கலாக்குகின்றன.[6]

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் தமது இருப்பானது துக்கத்திற்கும், சந்தேகத்திற்கும் இடையில் சிக்கியிருப்பதாகக் கூறுகின்றனர். "*எமது பிள்ளைகள் உயிருடன் இருப்பதாக நினைத்தபடியே நாம் இறக்க விரும்புகிறோம். இச்செய்முறையை ஏற்றுக்கொள்ளவோ அல்லது அதில் பங்குபற்றவோ எமது ஆழ்மனம் விரும்பவில்லை,*" என்று தாய் ஒருவர் விளக்கினார்.[7] அதே நேரத்தில், அகழ்வுத் தளத்தை ஆவணப்படுத்துபவர்கள் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர். "*தோண்டியெடுக்கும் செய்முறை குறித்துச் செய்தி சேகரித்துத் தெரிவிப்பவர்கள் மீது கண்காணிப்பு உள்ளது. அரச புலனாய்வு அதிகாரிகள் அல்லது அவர்கள் கொடுக்கும் ஊதியத்திற்கு வேலை செய்பவர்கள் அவ்விடத்திற்கு யார் வருகிறார்கள் என்பதைக் கண்காணிக்கிறார்கள்,*" என ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டார்.[8] இத்தகைய கண்காணிப்புச் செயற்பாடுகள், யாழ்ப்பாணத்தில் நினைவு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான முயற்சிகளைப் பாதிக்கும் தொடர்ச்சியான அச்சத்தினைப் பிரதிபலிக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்ட நபருக்கு என்ன நடந்தது என்பதும், அவர் எங்கிருக்கிறார் என்பதும் தெளிவுபடுத்தப்படும் வரை பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டமை ஓர் தொடரும் மீறலாகவே இருக்கும் என்பதைச் சர்வதேசச் சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகிறது.[9] இலங்கையானது பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேசச் சமவாயத்தின் (ICPPED) ஓர் தரப்பாக இருப்பதுடன், முழுமையான, பக்கச்சார்பற்ற விசாரணைகளைக் காலம் தாழ்த்தாது நடத்துவதற்கும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூற வைப்பதற்கும், உண்மை மற்றும் இழப்பீடு தொடர்பில் குடும்பங்களுக்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் கடமைப்பட்டுள்ளது.[10] குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையானது (ICCPR) வாழ்வதற்கான உரிமைக்கும், எதேச்சையான கொலைகளுக்குப் பயனுள்ள தீர்வுகள் அளிக்கப்படுவதற்கும் உத்தரவாதம் அளிக்கிறது. சித்திரவதைக்கு எதிரான சமவாயமானது (CAT) சித்திரவதைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுவதையும், பொறுப்புக்கூறப்படுவதையும் கோருகிறது. ஜெனீவாச் சமவாயங்களின் (பொதுவான உறுப்புரை 3) கீழ், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் செய்வதிலிருந்து இலங்கை தடை செய்யப்பட்டுள்ளதுடன், மோதலின் போது பொதுமக்கள் மனிதாபிமானமான முறையில் நடத்தப்படுவதை அது உறுதி செய்யவும் வேண்டும்.

சாத்தியமான சட்டவிரோத மரணத்தின் விசாரணை பற்றிய திருத்தப்பட்ட மினசோட்டா நெறிமுறையானது (2016), சாத்தியமான சட்டவிரோத மரணங்களை விசாரிப்பதற்கான நியமங்களை வகுத்துள்ளது. அது சுதந்திரமான, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய, பயனுள்ள குடும்பப் பங்கேற்பைக் கோருகிறது.[11] மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்பு மற்றும் அவை தொடர்பான விசாரணை என்பவற்றிற்கான போர்ன்மவுத் நெறிமுறையானது (2019), மனிதப் புதைகுழிகளின் இரட்டைத் தொழிற்பாட்டை அடையாளம் கண்டுள்ளது. குற்றங்களின் சான்றாக

---

[6] சோஃபி பிஸ்பிங்கின் *இலங்கையிலுள்ள மனிதப் புதைகுழித் தளங்கள்: வரலாறும், சட்டக் கட்டமைப்பும்*, இனம் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (ICES), 2023, மற்றும் CHRD, JDS, FOD மற்றும் ITJP, *இலங்கையின் மனிதப் புதைகுழிகளும், தோல்வியுற்ற அகழ்வுச் செயற்பாடுகளும்*, 2023, ஆகியவற்றைப் பார்க்கவும்.
[7] காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[8] மனிதப் புதைகுழித் தளம் குறித்துத் தகவல் தெரிவிப்பதற்காகச் செயற்படும் ஊடகவியலாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025
[9] காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடுவதற்கான வழிகாட்டற் கோட்பாடுகள், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய குழு, மே 2019, கோட்பாடு 7
[10] பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேசச் சமவாயத்தினைப் (2006) பார்க்கவும்.
[11] திருத்தப்பட்ட மினசோட்டா நெறிமுறையானது "குடும்பம்" என்ற சொல் "இறந்தவரின் உறவினர்களையும் உள்ளடக்கியதாக விரிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்," என்பதைக் குறிப்பிடுகிறது. நீதிக்குப் புறம்பாக நிறைவேற்றப்படும் அல்லது உடனடியாக நிறைவேற்றப்படும் அல்லது எதேச்சையாக நிறைவேற்றப்படும் மரண தண்டனைகளைப் வினைத்திறனுடன் தடுப்பது மற்றும் அவை குறித்து விசாரிப்பது பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் திருத்தப்பட்ட கையேட்டைப் பார்க்கவும், இது https://www.ohchr.org/sites/default/files/Documents/Publications/MinnesotaProtocol.pdf எனும் இணைப்பில் கிடைக்கிறது.

இருப்பதும், துக்கம் அனுசரிப்பதற்கான தளங்களாக இருப்பதுமே அவை.[12] இந்நெறிமுறையானது குற்றவழக்குத் தொடுப்பதற்கான நியமங்களுக்கு அமைவாக ஆதாரங்களைப் பாதுகாக்கவும், பிழையான நோக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதிலிருந்து புதைக்கப்பட்ட இடங்களைப் பாதுகாக்கவும், குடும்பங்களின் பண்பாடு மற்றும் சமூக உளவியல் சார்ந்த தேவைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்யவும் விசாரணைகளைப் பணிக்கிறது.

இலங்கையின் உள்நாட்டுக் கட்டமைப்பானது பகுதியளவு இணக்கத்தை மட்டுமே வழங்குகிறது. நீதவான் விசாரணைகள், நீதித்துறை மேற்பார்வையை அனுமதிக்கின்றன. ஆனால், அவை குடும்பப் பங்கேற்பிற்கோ அல்லது வெளிப்படைத்தன்மைக்கோ உத்தரவாதம் அளிக்காது. 2016 இல் நிறுவப்பட்ட காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது (OMP), மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் தனது மையப் பணிப்பாணையின் கீழ் வருகின்றன என்று குறிப்பிடுகிறது.[13] செம்மணி உட்படப் பதினேழு மனிதப் புதைகுழி தொடர்பான வழக்குகளில் தான் தலையிட்டதாகவும், நீதிமன்றங்களுக்குப் பரிந்துரைகளை வழங்கியுள்ளதாகவும், நிதி வழங்க வசதி செய்ததாகவும், மும்மொழிகளிலும் செய்தி வெளியீடுகளை வெளியிட்டதாகவும் அது கூறுகிறது.[14] இருப்பினும், தடயவியல் ஊழியர்களின் பற்றாக்குறையையும், *தற்காலிகச்* சட்ட அவதானிப்பாளர்களை நம்பியிருப்பதையும், வரையறுக்கப்பட்ட வளங்கள் தனது வகிபாகத்தைத் தொடர்ந்தும் கட்டுப்படுத்துவதையும் அந்த அலுவலகம் ஒப்புக்கொள்கிறது.[15]

வரலாற்றுக் கோலங்களையும், தற்போதைய தோல்விகளையும் பார்த்த குடும்பங்களினதும், சமூக உறுப்பினர்களினதும், வழக்கறிஞர்களினதும், ஊடகவியலாளர்களினதும் குரல்களை மையமாகக் கொண்டு இச்சுருக்கக் குறிப்பை அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் வரைந்துள்ளது. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கருத்துகளும் கேட்கப்பட்டன. இச்சுருக்கக் குறிப்பானது 2025 ஆம் ஆண்டின் அகழ்வுச் செயற்பாடுகளை அவற்றின் வரலாற்றுப் பின்னணிக்குள் நிலைநிறுத்துவதுடன், தொடர்ச்சியான நிறுவன ரீதியான தோல்விகளை மதிப்பாய்வு செய்து, இலங்கையின் கடப்பாடுகளுக்கும், அதன் செயற்பாடுகளுக்கும் இடையில் தொடர்ந்து நிலவி வரும் இடைவெளியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மிக முக்கியமாக, இச்சுருக்கக் குறிப்பு பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை மையப்படுத்தி நீதிக்கு எது தேவையானது என்பதை வரையறுக்கிறது.

[12] மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்பு மற்றும் அவை தொடர்பான விசாரணை என்பவற்றிற்கான போர்ன்மவுத் நெறிமுறை, https://www.icmp.int/wp-content/uploads/2022/02/mass_graves_project_english-4.pdf எனும் இணைப்பிற் கிடைக்கிறது. அக்னஸ் கல்லமார்ட்டின் *நீதிக்குப் புறம்பாக நிறைவேற்றப்படும் அல்லது உடனடியாக நிறைவேற்றப்படும் அல்லது எதேச்சையாக நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் பற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை: உலகம் முழுவதும் காணப்படும், வரலாற்றின் பல்வேறு காலப்பகுதிகளைச் சேர்ந்த, பெரும் மனிதப் படுகொலைகளும், சட்டத்துக்குப் புறம்பான மரணங்களும் இடம்பெற்ற ஏராளமான இடங்களை முனைப்புறுத்தும், மனிதப் புதைகுழிகள்*, UN Doc.A/75/384, ஒக்டோபர் 2020 இனையும் பார்க்கவும்.

[13] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உடனும், அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெ. தற்பரன் உடனும் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில், செப்டெம்பர் 2025

[14] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்

[15] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உடனும், அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெ. தற்பரன் உடனும் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில், செப்டெம்பர் 2025

## 2. செம்மணி: கடந்த காலமும், நிகழ்காலமும்

**"மக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்துப் பேசுவது வழமை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த எவரும் இராணுவத்தால் மட்டுமே அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதை நாங்கள் அறிவோம்."**

**காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய்[16]**

1996 ஆம் ஆண்டு பாடசாலை மாணவி கிருசாந்தி குமாரசாமி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதன் மூலம் செம்மணி உத்தியோகபூர்வ ஆவணங்களில் இடம்பெற்று முதன்முதலில் பொதுமக்கள் கவனத்தையும் பெற்றது. 1998 ஆம் ஆண்டு இடம்பெற்ற வழக்கு விசாரணையின்போது, கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவும், ஏனைய எட்டுப் பேரும் இக்குற்றங்களுக்காகக் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டனர். அதற்கான தண்டனைத் தீர்ப்பு விசாரணையின் போது, ராஜபக்ஷ ஓர் அதிர்ச்சியூட்டும் ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கினார். 1996 ஆம் ஆண்டில் செம்மணி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தபோது, முந்நூறு முதல் நானூறு சடலங்கள் அங்கு புதைக்கப்பட்டன என்பதை அவர் வெளிப்படுத்தினார்.[17] ராஜபக்ஷ முதுநிலை அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டதோடு, யாழ்ப்பாணத்தில் பரவலாக இடம்பெற்ற ஆட்கள் காணாமல் போன சம்பவங்களில் இராணுவத்தை நேரடியாக சம்பந்தப்படுத்தினார்.[18]




*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறையின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் அகழ்வுப் பணிகள், 2025*

[16]காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[17]https://www.amnesty.org/en/documents/asa37/022/1998/en/ எனும் இணைப்பிலுள்ள தகவல்களைப் பார்க்கவும்.
[18]https://tamilnation.org/indictment/genocide95/gen95105a எனும் இணைப்பிலுள்ள தகவல்களைப் பார்க்கவும்.

தொண்ணூறுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடந்த விதி மீறல்ச் சம்பவங்களின் பரந்த பின்னணியிலிருந்து செம்மணியின் வரலாற்றைப் பிரிக்க முடியாது.[19] 1996 ஆம் ஆண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தை இராணுவம் முழுமையாகக் கைப்பற்றியதை அடுத்து, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் (PSO), பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA), அவசரகால ஒழுங்குவிதிகள் (ER) ஆகியவற்றின் பிரயோகத்தின் மூலம் இராணுவம் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாக நிலைநிறுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில், யாழ்ப்பாணம் மாலை ஆறு மணி முதல் காலை ஆறு மணி வரை ஊரடங்கு உத்தரவுகளுடன் கடுமையான இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது.

குடும்பங்கள் தொடர்ந்தும் அச்சத்தில் வாழ்ந்தன. அரியலையில் வசிக்கும் அச்சமூக உறுப்பினரும், வழக்கறிஞருமான கு. ஐங்கரன் அக்காலத்தைப் பற்றிப் பின்வருமாறு நினைவு கூர்கிறார். "*ஆரம்பத்தில் இராணுவம் ஓர் நட்பு அணுகுமுறையைக் கடைப்பிடித்தது. இல்லை நாங்கள் அனைவரும் அவ்வாறு எண்ணிக்கொண்டு இருந்திருக்கலாம். ஆனால், கிருசாந்தி கடத்தப்பட்டுப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பின் எல்லாம் மாறிவிட்டது. இது ஒரு தனித்த சம்பவம் அல்ல என்பதை மக்கள் உணரத் தொடங்கினர். ஊடகங்களில் இதுபோன்ற செய்திகள் அதிகம் வராததால் நாங்கள் அது பற்றி அறிந்திருக்கவில்லை [என்பதே உண்மை.]*"[20] "*அப்போது துப்புக் கொடுப்பதும், சுற்றிவளைப்பதும் மட்டுமே இடம்பெற்றன. [துப்புக் கொடுக்கும் தகவலாளிகளில்] தமிழ் பேசுபவர்களும், சிங்களம் பேசுபவர்களும் இருந்தனர். அக்காலத்தில் இராணுவம் சுற்றிவளைப்புகளை நடத்தும். அது பற்றிய செய்தி மக்களை எட்டும் நேரத்தில், அந்த நபரும், அவரின் குடும்பத்தினரும் காணாமல் போயிருப்பர்,*" என அவர் மேலும் தெரிவித்தார்[21]

தெளிவான இலக்கு எதுவும் இல்லாமல் எழுந்தமானமாகத் தொடர்பின்றிக் கைது செய்யப்படுதல் பொதுவாக இடம்பெற்றது, "*எவ்வித வகைப்பாடுகளும் இல்லாமல், எமது கொடுப்பினையைப் பொறுத்தே அது இருந்தது. உதாரணமாக, நாங்கள் ஒரு இறப்பர்ச் செருப்பு அணிந்தால், அது விடுதலைப் புலிகளின் செருப்பா என்று அவர்கள் கேட்பார்கள்... நான் கடையில் பங்கீட்டு முறையில் வழங்கப்பட்ட உலருணவுப் பொருட்களை வாங்கினால், அது விடுதலைப் புலிகளுக்குச் சமைப்பதற்காகவா என்று அவர்கள் கேட்பார்கள்,*" என அந்தத் தன்னிச்சைப்போக்கைத் தாய் ஒருவர் விவரித்தார்.[22]

1997 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஆட்கள் காணாமல் போன சம்பவங்களை விசாரிக்கப் பந்துல குலதுங்க தலைமையில், முதுநிலை இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கிய ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றைப் பாதுகாப்பு அமைச்சு நியமித்தது.[23] அக்குழு தனது அறிக்கையை 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் சமர்ப்பித்தது.[24] அதில் ஆட்கள் காணாமல் போன இருபத்தைந்து சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இருப்பினும், இந்த அறிக்கை இன்றுவரை வெளியிடப்படாமல் உள்ளதுடன், அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, அது தொடர்பில் எவ்வித வழக்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

1999 ஆம் ஆண்டில், ராஜபக்ஷவின் ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நீதவான் விசாரணை ஒன்று, கணிசமான சர்வதேச மேற்பார்வையுடன் செம்மணியில் அகழ்வுச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தது. அதில் பதினைந்து என்புக்கூட்டு எச்சங்கள் மட்டுமே

[19] *யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பரவலான "ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள்" தொடர்பில் அரசாங்கத்தின் பதில்*, சர்வதேச மன்னிப்புச் சபை, நவம்பர் 1997, https://www.amnesty.org/en/documents/asa37/024/1997/en/ எனும் இணைப்பில் கிடைக்கிறது.
[20] கு. ஐங்கரன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[21] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்
[22] காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[23] விசாரணைச் சபை என அறியப்படுகிறது, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பலவந்தமாக *அல்லது தன்னிச்சையற்றுக் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பணிக்குழுவின் உறுப்பினர் ஒருவரின் இலங்கை வருகை தொடர்பான அறிக்கை (25-29 ஒக்டோபர் 1999), E*/CN.4/2000/64/Add.1, 21 டிசம்பர் 1999 இனையும் பார்க்கவும். https://docs.un.org/en/E/CN.4/2000/64/Add.1 எனும் இணைப்பில் கிடைக்கிறது.
[24] த ஸ்ரீலங்கா மொனிட்டர், ஜூலை 1998, பக்கம் 4, https://noolaham.net/project/388/38735/38735.pdf எனும் இணைப்பில் கிடைக்கிறது.

மீட்கப்பட்டன. இரு சடலங்கள் 1996 ஆம் ஆண்டு காணாமல் போன இளைஞர்கள் உடையவை என அடையாளம் காணப்பட்டன. இது செம்மணிக்கும், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலுக்கும் உள்ள தொடர்பிற்கு நேரடி ஆதாரமாக அமைந்தது. ஒரு சில இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டன, ஆனால், நிறுவன ரீதியான தாமதங்களால் இவ்வழக்குகள் நீதிமன்றங்களில் முடங்கி, இன்றுவரை அங்கே நிலுவையில் உள்ளன.[25] அந்த இராணுவச் சிப்பாய்கள் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டுத் தொடர்ந்தும் இராணுவத்தில் பணிபுரிந்தனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID)[26] சட்டமா அதிபரின் (AG) திணைக்களத்தின் ஆலோசனையின்றி இவ்விசாரணையை மேலுந் தொடர இயலாதென்று கூறியது, அந்த ஆலோசனை ஒருபோதும் வழங்கப்படவில்லை. அது வழக்குகள் காலவரையின்றி நிறுத்தப்படுவதைத் திறம்பட உறுதி செய்தது.

இருப்பினும், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் எதிர்ப்புச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தன. இரண்டாயிரங்களின் முற்பகுதியில், இக்குடும்பங்களின் உறுப்பினர்கள் இணைந்து சங்கம் ஒன்றை உருவாக்கிக் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர்கள் கொண்ட பட்டியல் ஒன்றைத் தயாரித்து, *ஆட்கொணர்வு* வழக்குகளுடன் யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்குச் சென்றனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) 2002 ஆம் ஆண்டில் விசாரணைக் குழு ஒன்றை நியமித்தது. அக்குழு 1990 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், யாழ்ப்பாணத்தில் ஆட்கள் காணாமல் போன முந்நூறுக்கும் மேற்பட்ட சம்பவங்களை ஆவணப்படுத்தியது.[27] 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதன் அறிக்கை, "பல சம்பவங்களில்" கைதுகள் பகிரங்கமாக, அதில் ஈடுபட்ட சிப்பாய்களை அடையாளம் காணக்கூடிய சாட்சிகளின் முன்னிலையில் நடத்தப்பட்டன என்பதைக் கண்டறிந்தது.[28] இந்த ஆதாரங்கள் இருந்தபோதிலும், இலங்கையின் நிறுவனங்கள் செயற்படத் தவறிவிட்டன.

> "*2002 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய போர் நிறுத்தக் காலப்பகுதியில் பொறுப்புக்கூறலைப் பின்தொடர்வதற்கான முயற்சிகள் இழுத்தடிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தமது உயிருக்கு அஞ்சுவதாகக் கூறியதைத் தொடர்ந்து வழக்கை அநுராதபுரத்துக்கு மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது தமிழ்க் குடும்பங்களுக்குக் கடக்க முடியாத தடைகளை உருவாக்கியிருக்கும். பயணச் செலவுகள் காரணமாக முறைப்பாட்டாளர்களால் பயனுள்ள வகையில் இச்செய்முறையில் பங்கேற்க முடியாமல் போயிருக்கும். குறிப்பாகச் சுதந்திரமாக நடமாடுவது தமிழர்களுக்குக் கடினமாக இருந்த காலகட்டம் ஒன்றில், பயணம் செய்வதற்குத் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு தேவைப்படும் நிலையில், இது அவர்களுக்குக் கடினமானதாக அமைந்திருக்கும். வெகுதொலைவிலுள்ள நீதிமன்றங்களில் சிங்கள மொழியில் இடம்பெறும் வழக்குகளில், வழக்கறிஞர்களை அமர்த்த அவர்களால் முடிந்திருக்காது. போர் மீண்டும் தொடங்கிய பின், [காணாமல் ஆக்கப்பட்டோரின்] குடும்பங்களின் சங்கத்தின் தலைவரும், அதன் உறுப்பினர்களும் தமது முயற்சிகளை இறுதியில் கைவிட்டனர்*"[29]

செம்மணி தொடர்பான முந்தைய விசாரணைகளின் ஆவணங்களை, "அவை எங்குள்ளன என்பதைக் கண்டுபிடிப்பதிலும், அவற்றை அணுகுவதிலும் உள்ள" சிக்கல்களைக் குறிப்பிட்டுத்

[25] சோஃபி பிஸ்பிங், *இலங்கையிலுள்ள மனிதப் புதைகுழித் தளங்கள்: வரலாறும், சட்டக் கட்டமைப்பும்*, இனம் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (ICES), 2023, பக்கங்கள் 12-13

[26] குற்றப் புலனாய்வுத் திணைக்களமானது நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கொலைகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், விசேட திறன்கள் தேவைப்படும் ஏனைய சிக்கலான வழக்குகள் போன்ற கடுமையான குற்றங்கள் குறித்துப் புலனாய்வு செய்வதற்குப் பொறுப்பான, இலங்கைப் பொலிசினுள் இயங்கும் ஓர் விசேட நிறுவனமாகும்.

[27] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் *யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய குழுவின் அறிக்கை,* ஒக்டோபர் 2003, https://www.hrcsl.lk/wp-content/uploads/2025/08/1.-Report-of-the-Committee-on-Disappearances-in-the-Jaffna-Region-1_compressed-2.pdf எனும் இணைப்பில் கிடைக்கிறது.

[28] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம், பக்கம் 36

[29] செம்மணி வழக்கில் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

தாம் அவற்றை இன்னும் திரட்டிக்கொண்டிருப்பதாகக் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், கூறுகிறது.[30] "*2025 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பதினான்காம் திகதியன்று, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட காணாமல் போன ஆட்களின் பட்டியல் உள்ளிட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தது. இப்பட்டியல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டது,*" என வழக்கறிஞர் ஒருவர் குறிப்பிட்டார்.[31] அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் சோமரத்ன ராஜபக்ஷ குற்றம் இழைத்தவர்களின் பெயர்களைக் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கு வழங்கியதாக ஊடகங்களில் செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்த போதிலும், அத்தகைய கூட்டம் ஒன்று இடம்பெற்றதென்பதையோ, அதன் விபரங்களையோ அந்நிறுவனம் பொதுவெளியில் பகிரவில்லை.[32]

2025 ஆம் ஆண்டு செம்மணியில் என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டமை, முந்தைய சம்பவங்களின் தொடர்ச்சி மற்றும் அதிலேற்பட்ட திடீர் மாற்றம் ஆகிய இரண்டையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, செம்மணி பற்றிய தனது சமீபத்திய உண்மை கண்டறியும் குழுவின் அறிக்கையில், "இங்கு உடல்கள் புதைக்கப்பட்டமை ஓர் சட்டவிரோதச் செயற்பாடாக இருப்பதற்கும், நீதிக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் விளைவாக இடம்பெற்றிருக்கக்கூடும் என்பதற்கும் நியாயமான சாத்தியக்கூறுகள் உள்ளன," என்று மதிப்பீடு செய்துள்ளது.[33] ஆயினும், சில முக்கிய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாது அப்படியே உள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அகழ்வுத் தளத்தினுள் அனுமதிக்கப்படுவதில்லை. குடும்பத்தினருக்கும், ஊடகவியலாளர்களுக்கும் அங்கு செல்வதற்குக் கட்டுப்பாடுகள் உள்ளன. அத்துடன் குற்றவழக்குத் தொடுப்பதற்கான தெளிவான வழிகாட்டல் எதுவும் இல்லை.

[30] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உடனும், அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெ. தற்பரன் உடனும் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில், செப்டெம்பர் 2025

[31] வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

[32] 24 ஓகஸ்ட் 2025 எனும் திகதியிடப்பட்ட வீரகேசரி ஞாயிறு இதழில் தெரிவிக்கப்பட்டு உள்ளதன்படி இச்சந்திப்பு 18 ஓகஸ்ட் 2025 எனும் திகதியில் இடம்பெற்றது.

[33] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் செம்மணியிலுள்ள மனிதப் புதைகுழி தொடர்பில் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் விசாரணை பற்றிய அறிக்கை, செப்டெம்பர் 2025, பக்கம் 4, https://www.hrcsl.lk/wp-content/uploads/2025/09/Fact-Finding-Report-of-HRCSL-on-Chemmani-Mass-Grave-Site.pdf எனும் இணைப்பில் கிடைக்கிறது.

## 3. முக்கிய கரிசனைகள்: திட்டமிட்ட, முறைமையான உரிமை மீறல்கள்

**" நீதிமன்ற உத்தரவின் பேரில், அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட நாற்பத்தைந்து தடயப் பொருட்கள் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டன. ஆனால், அங்கு வந்தவர்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் அவதானித்துக் கொண்டிருந்தனர். அரியாலையில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். ஆனால் நான்கு அல்லது ஐந்து குடும்பங்களின் உறுப்பினர்கள் மட்டுமே அத்தடயப் பொருட்களைப் பார்க்கச் சென்றனர். மக்கள் அச்சத்தின் காரணமாக அங்கு செல்லவில்லை."**

**அரியாலைச் சமூக உறுப்பினர் ஒருவர்[34]**

செம்மணியில் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் விசாரணையானது, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைத் திட்டமிட்டு, முறைமையாக இச்செய்முறையிலிருந்து விலக்கி வைக்கும், உண்மையைத் தேடுவதை ஒடுக்கும், முன்பிருந்த நிலைமைகளையே தொடர்ந்தும் நீடிக்கச் செய்யும் ஒன்றோடொன்று தொடர்புடைய உரிமை மீறல் வடிவங்களை வெளிப்படுத்துகிறது. இம்மீறல்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தனித்த தோல்விகளாக அல்லாது, ஒன்றுக்கொன்று ஒத்திசைவான ஓர் ஒருங்கிணைந்த தடையமைப்பாகவே உருவெடுத்துள்ளன.

### 1) அச்சுறுத்துதலின் ஊடும், கண்காணிப்பின் ஊடும் விலக்கி வைத்தல்

செம்மணி விசாரணையில் இருந்து குடும்பங்கள் திட்டமிட்டு, முறைமையாக விலக்கப்படுவது கண்காணிப்பும், அச்சுறுத்தலும் நிறைந்த சூழலினாலேயே நிகழ்கிறது. இது முறைசார் வாய்ப்புகள் இருக்கும்போதும் பயனுள்ள வகையில் அவர்கள் இச்செய்முறையில் பங்கேற்பதைச் சாத்தியமற்றதாக்குகிறது. இச்செய்முறையில் பங்குபற்றுவதற்குக் குடும்பங்களுக்கு உள்ள உரிமைகளை அங்கீகரிக்கும், நிறுவப்பட்ட சட்ட முன்னுதாரணம் இருக்கின்ற போதிலும்,[35] செயல்முறை ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் விலக்கப்படுதல் நிகழ்கிறது. இது இச்செய்முறையின் ஒவ்வொரு அம்சத்திலும் பரவியிருக்கும் பயத்தால் வலுப்படுத்தப்படுகிறது.

#### சட்ட உரிமைகள் இருந்தபோதிலும் செயல்முறை ரீதியாக விலக்கப்படுதல்

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நீதிமன்ற விசாரணைகளில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டாலும், அகழ்வுத் தளத்திற்குச் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அத்துடன், இச்செய்முறையில் அவர்களுக்குப் பயனுள்ள ஆலோசனைகள் எதுவும் வழங்கப்படுவது இல்லை. "*பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை. வழக்கறிஞர்கள் அவர்களில் சிலரைச்*

[34] அரியாலைச் சமூக உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், ஒகஸ்ட் 2025

[35] மன்னார் சதொச மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கில், 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வவுனியா மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் பங்குபற்றுவதற்கான உரிமையும், நீதிமன்ற நடவடிக்கைகளில் அவர்களின் நலன்களைச் சட்டத்தரணிகளைக் கொண்டு பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான உரிமையும் உள்ளன என்பதை நிறுவியது. சோஃபி பிஸ்பிங், *இலங்கையிலுள்ள மனிதப் புதைகுழித் தளங்கள்: வரலாறும், சட்டக் கட்டமைப்பும்*, இனம் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (ICES), 2023, பக்கங்கள் 17-18 ஐப் பார்க்கவும்

*சந்தித்திருக்கலாம். சில தாய்மார்கள் இச்செய்முறையில் தங்களை ஈடுபடுத்தத் தயாராக உள்ளனர். ஆனால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு வழங்கப்படவில்லை,*"[36] எனக் குடும்ப உறுப்பினர் ஒருவர் விளக்கினார். "*அவர்கள் நேரடியாக இச்செய்முறையில் பங்கேற்கவில்லை. அடையாளம் காண்பதற்காகத் தடயப் பொருட்கள் ஒரு நாள் மட்டுமே காட்சிப்படுத்தப்பட்டன. அது குறித்த தகவல் எந்தளவுக்குக் குடும்பங்களைச் சென்று அடைந்தது என்று எனக்குத் தெரியவில்லை,*"[37] என இதன் விளைவுகள் குறித்த தனது பார்வையைச் சமூக உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.

வவுனியா மேல் நீதிமன்ற வழக்கில் தான் இடையிட்டதை மேற்கோள் காட்டி, செம்மணி குறித்து ஊடக வெளியீடுகளை மும்மொழிகளிலும் ஒழுங்காகத் தான் வெளியிடுவதாகவும், நீதிமன்றத்தில் குடும்பங்களின் சட்டபூர்வ பிரதிநிதித்துவத்திற்காகத் தான் வாதிட்டுள்ளதாகவும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் கூறுகிறது.[38] குடும்பங்களிடமிருந்து இறப்பிற்கு முந்தைய தகவல்களைச் சேகரிப்பதற்காக, நேர்காணல் படிவங்கள், சமூக உளவியல் வழிகாட்டல் குறிப்புகள் போன்ற புதிய செய்முறைகளைத் தான் உருவாக்கி வருவதாகவும் அது தெரிவிக்கிறது.[39] இருந்தபோதும், நாம் நேர்காணல் செய்த பாதிக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்கள் தாம் ஓரங்கட்டப்பட்டிருப்பதை விவரிக்கின்றனர். இது முறைசார் நடவடிக்கைகளுக்கும், அம்மக்களின் அன்றாட வாழ்வின் உண்மை நிலைக்குமிடையே உள்ள குறிப்பிடத்தக்க இடைவெளியை வெளிப்படுத்துகிறது.

**விலக்கி வைத்தலை நடைமுறைப்படுத்தும் ஓர் கருவியாக அச்சுறுத்தல் பயன்படுத்தப்படுதல்**

இந்தச் செயல்முறை ரீதியான விலக்குதல், முறைசார் உரிமைகளைப் பொருளற்ற சைகைகளாக மாற்றும் பரந்த கண்காணிப்புச் சூழல் ஒன்றினுள் செயற்படுகிறது. குடும்பங்களும், சமூகவுறுப்பினர்களும் தாம் பாதுகாப்பு நிறுவனங்களால் கண்காணிக்கப்படுவதாகவும், விசாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். "*நான் இருபத்து நான்கு மணி நேரமும் கண்காணிக்கப்படுகிறேன். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். பாதுகாப்புப் பிரச்சினைகள் உள்ளன. நாம் உண்மையைத் தெரிவிக்கும்போது, அது குற்றம் இழைத்தவர்களைப் பாதிக்கும், எனவே நாம் பேசாமல் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள்,*"[40] என்று காணாமல் போன நபர் ஒருவரின் தாய் ஒருவர் நேரடியாகத் தெரிவித்தார்.

இந்த அச்சுறுத்தல் குடும்பக் கட்டமைப்புகளுக்கு உள்ளும் ஊடுருவி, மக்கள் தம்மைத் தாமே தணிக்கை செய்துகொள்ளும் சூழலை உருவாக்குகிறது. இது இறுதியில் அரச நலன்களுக்கே சாதகமாக முடிகிறது. பிள்ளைகளே தமது பெற்றோரை நீதி கோருவதிலிருந்து தடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்: "*இதைப் பின்தொடர வேண்டாம் என்று எமது பிள்ளைகள் சொல்கிறார்கள், எஞ்சியிருக்கும் பிள்ளைகளாவது உயிர் பிழைத்து வாழ வேண்டும் என்பதால் அவர்கள் அவ்வாறு சொல்கிறார்கள்.*"[41] இந்த நிலைப்பாடு அரச அச்சுறுத்தல் எவ்வாறு ஒட்டுமொத்த குடும்ப அமைப்பிற்கும் எதிராகச் செயற்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. இது குடும்பங்கள் இச்செய்முறையிலிருந்து விலகியிருப்பதை, அச்சுறுத்தலை உபயோகித்து வலுக்கட்டாயமாகச் செய்ய வைக்கப்படும் செயலாக அல்லாது, மக்கள் தாமாகவே முன்வந்து எடுக்கும் முடிவு ஒன்றைப் போல் தோற்றமளிக்கச் செய்கிறது.

இம்முடக்கும் விளைவானது அளப்பெரியது; திட்டமிட்டு, முறைமையாக நிகழ்த்தப்படுவது. சமூக உறுப்பினர் ஐங்கரன் குறிப்பிட்டது போல், "*மக்கள் பகிரங்கமாகப் பேசப் போவதில்லை. குறிப்பாக ஊடகவியலாளர் குமணனுக்கு என்ன நடந்தது என்பதைப் பார்த்த பின் [அவர்கள் பொதுவெளியிற் பேசப் போவதில்லை.] குமணனுக்காவது அவருக்கு நடந்தது குறித்து ஊடக வெளிச்சமும், சர்வதேசக் கவனமும் கிடைத்தது. சாதாரண மக்களுக்கு அது கிடைக்கப்*

[36] காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான சங்கம் ஒன்றின் செயலாளராகத் தற்போது பணியாற்றும் காணாமலாக்கப்பட்ட நபரொருவரின் தாயொருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[37] சமூக உறுப்பினர் ஒருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[38] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உடனும், அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெ. தற்பரன் உடனும் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில், செப்டெம்பர் 2025
[39] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்
[40] காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[41] காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கான சங்கம் ஒன்றின் செயலாளராகத் தற்போது பணியாற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

*போவதில்லை.*"[42] இந்த அச்சம் சட்ட நடவடிக்கைகள் வரை தொடர்கிறது. நேரடி அச்சுறுத்தல்கள் இருப்பதைக் குறிப்பிடும் கண்காணிப்பாளர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்: "*இச்செம்மணிச் சம்பவத்தைப் பொலிசாரிடம் கொண்டு சென்ற நபருக்கே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவர் இப்பிரச்சினையைச் சட்டப்பூர்வமாக அணுகிய ஒருவர். இது ஓர் மிரட்டல் செயற்பாடாகும். எனவே சாட்சியம் அளிப்பது குறித்து அச்சம் நிலவுகிறது.*"[43]



*பொலிசாரினதும், புலனாய்வுப் பிரிவினரினதும் கடுமையான கண்காணிப்பிற்கு மத்தியில், ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற தடயப் பொருட்களை அடையாளம் காணும் செய்முறைக்குப் பொதுமக்கள் வந்து போதல்.*

## பொருளாதாரத் தடைகளும், உளவியல் ரீதியான தடைகளும்

பொருளாதாரக் கட்டுப்பாடுகள் விலக்கி வைக்கப்படுதல், அச்சுறுத்தப்படுதல் ஆகிய இரண்டின் விளைவுகளையும் மேலும் மோசமாக்குகின்றன. வாய்ப்புகள் கிடைக்கும்போது கூடப் பல குடும்பங்களால் இச்செய்முறையில் பங்கேற்பதற்கான செலவுகளைத் தாங்க முடிவதில்லை. "*பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவி தேவை. அவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே அவர்களின் பொருளாதாரச் சூழல் காரணமாக அவர்களால் நீதியைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை,*"[44] எனத் தாய் ஒருவர் விளக்கினார்.

விலக்கப்படுதலின் உளவியல் ரீதியான தாக்கமும் இதற்குச் சமமான அளவில் கவலை அளிப்பதாகவே உள்ளது. என்புக்கூடுகளையோ அல்லது தடயப் பொருட்களையோ அடையாளம் காணும், மிகுந்த மன வேதனையை அளிக்கக் கூடியதும், ஆறாத வடுவை ஏற்படுத்தக் கூடியதுமான செய்முறையைக் கையாள்வதற்குத் தேவையான போதுமான ஆதரவு அக்குடும்பங்களுக்கு இல்லை. "*நாங்கள் தடயப் பொருட்களைப் பார்வையிடத் தொடங்கியபோது,*

[42] கு. ஐங்கரன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025. ஊடகவியலாளர் குமணன் எதிர்கொண்ட அச்சுறுத்தல் குறித்து மேலும் அறியப் பின்வரும் இணைப்பிற்குச் செல்லவும்: https://www.ifj.org/media-centre/news/detail/category/press-releases/article/sri-lanka-tamil-journalist-interrogated-for-reporting-on-mass-graves
[43] சமூக உறுப்பினர் ஒருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2015
[44] காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

*தாய்மார்கள் அழத் தொடங்கினர், இதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் நாங்கள் இல்லை,"* எனத் தாய் ஒருவர் விளக்கினார்.[45] விசாரணைச் செய்முறைகளின் போது குடும்பங்களின் சமூக உளவியல் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதைப் போர்ன்மவுத் நெறிமுறை வலியுறுத்தினாலும், அத்தகைய ஆதரவு அமைப்பு எதுவும் நடைமுறையில் நிறுவப்பட்டு இல்லை.

அடிப்படையான கேள்விகள் இன்னும் பதிலளிக்கப்படாமல் இருப்பதைச் சமூக உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினார்: "*நீண்ட காலமாகத் தேடி அலைந்ததனால் குடும்பங்கள் களைப்படைந்தும், உளவியல் ரீதியாகச் சோர்வடைந்தும் இருக்கும் போது, திடீரென அவர்களை வந்து தடயப் பொருட்களை அடையாளம் காட்டச் சொல்வது சரியான அணுகுமுறை அல்ல. அக்குடும்பங்கள் உண்மையில் எதை விரும்புகின்றன, அவர்கள் என்ன செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், ஓர் சமூகமாக ஒன்றிணைந்து நாம் இதை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறோம் என்பதைத் தீர்மானிப்பதற்கும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படுவது இல்லை.*"[46]



*காட்சிப்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்களும், ஏனைய தடயப் பொருட்களும்.*

### சாட்சிகளுக்கான பாதுகாப்பு அமைப்பின் தோல்விகள்

சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான வினைத்திறனான பொறிமுறைகள் எதுவும் இல்லாதது, அச்சுறுத்தல்கள் தடைகள் எதுவுமின்றித் தொடர்வதற்கு வழிவகுக்கிறது. சட்டத்துறையினர் இடையே கூட, பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிகளையும் பாதுகாப்பதற்குத் தேசிய அதிகாரசபை ஒன்று இருப்பது பற்றியும், அதன் செயற்பாடுகள் பற்றியும் மிகக் குறைந்த அளவிலான விழிப்புணர்வே இருப்பதாக ஐங்கரன் வலியுறுத்திக் கூறினார்: "*சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான அதிகாரசபை ஒன்று உள்ளது என்பது கூட மக்களுக்குத் தெரியாது. என்னைப் போன்ற சட்டத்துறையில் உள்ளவர்களுக்குக் கூட அந்த அதிகாரசபை எவ்வாறு செயற்படுகிறது என்பது*

[45] காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[46] கு. ஐங்கரன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

*தெரியாது. தடயப் பொருட்களை அடையாளம் காணும் செயற்பாடு இடம்பெற்ற போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் நின்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்க வேண்டாமா?*"

இந்த நிறுவன ரீதியான தோல்வி, சட்ட உரிமைகளை வெற்று வாக்குறுதிகளாக மாற்றுகிறது. இச்செய்முறையில் பங்குபற்றினால் தங்களுக்கு எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதைப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் புரிந்துகொள்கின்றன, அதேசமயம், அதிகாரிகள் நம்பகமான பாதுகாப்புப் பொறிமுறைகள் எதையும் வழங்குவது இல்லை. இது விலக்கப்படுதலையே ஏற்படுத்துகிறது. விலகியிருத்தல் அவர்கள் தாமாகவே முன்வந்து எடுத்த முடிவைப் போல் தோன்றினாலும், அது உண்மையில் திட்டமிட்டு, முறைமையாக மேற்கொள்ளப்படும் அரச அச்சுறுத்தலின் ஊடாகவே நிகழ்த்தப்படுகிறது.

**கூட்டு எதிர்வினை ஒடுக்கப்படுதல்**

இந்த அச்சுறுத்தலானது தனிப்பட்ட குடும்பங்களை ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதோடு மட்டுமன்றி, அதைத் தாண்டி, மக்கள் கூட்டாக இணைந்து செயற்படுவதையும், ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருப்பதையும் ஒடுக்குவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இது குறித்துத் தாய் ஒருவர் பின்வருமாறு விளக்கினார்: "*இப்பிரச்சினைகள் குறித்துப் பொதுவெளியில் பேசப் பயப்படுபவர்கள் உள்ளனர். சிலர் தனிப்பட்ட முறையில், மறைவாகப் பேசவும், தமது அடையாளத்தை வெளிப்படுத்தாது தகவல்களை வழங்கவும் தயாராகவுள்ளனர். அவர்களின் குடும்பங்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம் ஆகும்.*"[47]

பகிரப்படாது உள்ள ஆதாரங்களின் அளவானது இவ்விசாரணையின் அடிப்படைப் போதாமையை வெளிப்படுத்துகிறது. இதுபற்றிச் சமூக உறுப்பினர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "*உள்ளூர்ப் பொறிமுறைகளில் இருந்து தலையீடு எதுவும் இல்லை என்றால், யாழ்ப்பாணத்தில் இருந்தே ஆயிரக்கணக்கான நபர்கள் சாட்சியம் அளிக்கத் தயாராக முன்வருவார்கள். என்ன நடந்தது என்று அவர்களுக்குத் தெரியும், உயிர் பிழைத்தவர்கள் உள்ளனர். ஆனால், இப்போது [அவர்களில்] பத்து வீதமானோர் கூட [சாட்சியம் அளிக்க] முன்வரவில்லை. இதற்குக் காரணம் பயம். அவர்களின் சாட்சியங்கள், அவர்களின் விபரங்கள் வெளியே கசியாத வகையில் [மிகவும் பாதுகாப்பாகக்] கையாளப்பட வேண்டும். அப்போதுதான் உண்மை வெளிவருவதற்கான வாய்ப்பு ஏற்படும்.*"[48]

இத்திட்டமிட்ட, முறைமையான அடக்குமுறையானது, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இச்செய்முறையிலிருந்து விலகியிருப்பதை, அச்சுறுத்தலை உபயோகித்து வலுக்கட்டாயமாகச் செய்யவைக்கப்படும் செயலாகக் காட்டாது, அது ஏதோ இயல்பாகவே நடப்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துகிறது. நிறுவன ரீதியான தடைகளைச் சவாலுக்கு உட்படுத்துவதற்குத் தேவையான கூட்டு வலிமையை அக்குடும்பங்கள் பெறுவதையும் இது தடுக்கிறது.

## 2) பண்பாட்டிற்கு ஏற்படும் தீங்கும், தகவல் கட்டுப்பாடும்

நேரடியான அச்சுறுத்தலுக்கப்பால், கூட்டாகத் துக்கமனுசரிப்பதும், நினைவுகூறல் நடைமுறைகளும் அடக்கப்படுவதன் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பண்பாட்டிற்குத் தீங்கேற்படுகிறது. முறையான மேற்பார்வையையும், பொறுப்புக்கூறலையுந் தடுக்கும் நோக்கிற் திட்டமிட்டு உருவாக்கப்படும் தகவற் குழப்பங்கள் இதற்கு மேலும் வலுச்சேர்க்கின்றன.

**துக்கம் அனுசரிப்பதும், பண்பாட்டு ரீதியான உரிமைகளும் ஒடுக்கப்படுதல்**

"*எங்களால் கூட்டாகச் சேர்ந்து அழக்கூட முடியவில்லை,*" எனச் சமூக உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்.[49] "அதற்குப் *பதிலாகத் தனித்தனியாகவே நாம் எமது துயரங்களிலிருந்து மீள்வதற்கான செய்முறைகளில் ஈடுபடவேண்டி உள்ளது. அரசாங்கம் எமது துயரத்தை*

[47] காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[48] அரியாலைச் சமூக உறுப்பினர் ஒருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[49] கு. ஐங்கரன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

*அங்கீகரிக்கவில்லை; மாறாக,, அது எங்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துகிறது.*"[50] கண்காணிப்பு குறித்த அச்சம், பொதுவெளியில் முன்னெடுக்கப்படும் நினைவேந்தல் சடங்குகளை முடக்கியுள்ளது. இதனால் சமூகத்தின் துயரமானது சிதறடிக்கப்பட்டுத் தனிநபர்களுக்கு உள்ளேயே முடங்கிப்போயுள்ளது.



*தடயப் பொருட்களை அடையாளம் காண்பதற்காகப் பொறுமையுடன் காத்திருக்கும் காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர்*

'போர்ன்மவுத் நெறிமுறையானது,' மரணம் தொடர்பான பண்பாட்டு ரீதியான நடைமுறைகளையும், சமய ரீதியான நடைமுறைகளையும் விசாரணைகள் மதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அத்தகைய சடங்குகளை மறுப்பது இரண்டாம் நிலைத் தீங்கினை ஏற்படுத்தும் என்பதை அது அடையாளம் கண்டு தெரிவித்துள்ளது. இலங்கையில் உள்ள மனிதப் புதைகுழிகள் தொடர்பில் இத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளன. "*காணாமல் போனவர்களைப் பொறுத்தவரை, அவர்களின் எச்சங்கள் அடையாளம் காணப்படாததால், அவர்களுக்கான மதச் சடங்குகளைச் செய்ய எங்களிடம் எந்த வழியும் இல்லை,*" என்று தாய் ஒருவர் இது குறித்து விளக்கினார்.[51]

இந்தப் பண்பாட்டிற்கு ஏற்படுந் தீங்கானது, "தமிழ்ச் சமூகத்தின் நினைவுகூர்வதற்கான உரிமை ஒடுக்கப்படுதல்" என்று அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிறுவனம் குறிப்பிடும், ஆழமான போக்கு ஒன்றைப் பிரதிபலிக்கிறது.[52] துக்கம் அனுசரிக்கும் நடைமுறைகளைக் கண்காணிப்பதும், நினைவேந்தல் முயற்சிகளைக் குற்றமாக்குவதும் போருக்குப் பின்பு தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகள் எங்கும் ஆவணப்படுத்தப்பட்டு உள்ளன. இது, இவை தற்செயலாக இடம்பெற்ற தவறுகள் அல்ல, மாறாகத் திட்டமிட்டு, முறைமையாக நடைமுறைப்படுத்தப்படும் அரச கொள்கை என்பதை உணர்த்துகிறது. [53]

---

[50] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்
[51] காணாமல் ஆக்கப்பட்ட நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[52] அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின், *சூழ்நிலைச் சுருக்கக் குறிப்பு எண்.4: தமிழ்ச் சமூகத்தின் நினைவுகூர்வதற்கான உரிமை இலங்கை அரசினால் ஒடுக்கப்படுதல்*, 12 ஜனவரி 2021 இனைப் பார்க்கவும். இது https://adayaalam.org/wp-content/uploads/2022/05/2021_01_12_ACPR-Situation-Briefing-No-4-Sri-Lankas-Repression-of-the-Tamil-Politys-Right-to-Remember.pdf எனும் இணைப்பில் கிடைக்கிறது.
[53] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்

## திட்டமிட்டு உருவாக்கப்படும் தகவல் குழப்பம்

செம்மணி விசாரணை தொடர்பான தகவல்கள் பகிரப்படுவதன் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், சர்வதேசச் சட்டத்தின் கீழான வெளிப்படைத்தன்மை குறித்த விதிகளை மீறுகின்றன. இத்தகைய சூழல், பிழையான தகவல்களுக்கும், தகவல்கள் திரிக்கப்படுவதற்கும் களம் அமைத்துக் கொடுக்கிறது. இதற்கு உதாரணமாகச் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட புகைப்படங்கள் அதிகளவில் பரப்பப்பட்டதைக் குறிப்பிடலாம். உத்தியோகபூர்வத் தகவல் கட்டமைப்பு எதுவும் இல்லாததால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் முறைமையான தகவல்களுக்காக அதிகாரிகளை நம்பி இருக்காது, வழக்கறிஞர்கள் மூலம் கிடைக்கும் துண்டு துண்டான தகவல்களையே சார்ந்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மனிதப் புதைகுழிகளுக்கான நியமச் செயற்பாட்டு நடைமுறைகளைத் (SOPs) தான் பரிந்துரைத்ததாகவும், இது குறித்து 2021 ஆம் ஆண்டில் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிடம் பரிந்துரைகளைத் தான் சமர்ப்பித்ததாகவும், அதன் விளைவாக நீதவான்களுக்குச் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பப்பட்டதாகவும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் கூறுகிறது.[54] மேலும், இது தொடர்பான விடய நிலை மாநாடுகளை நடத்தவும், அரச நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் அது அழைப்பு விடுத்துள்ளது.[55] இருப்பினும், இந்த முறைமையான நடவடிக்கைகள் களத்திலுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் தொடர்ச்சியானதும், சீரானதுமான வெளிப்படைத்தன்மையை வழங்குவதாகத் தெரியவில்லை.

உத்தியோகபூர்வத் தகவல் தொடர்பு வழிகள் ஏதும் இல்லாமை, வழக்கறிஞர்களே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சரியான சேவையை வழங்கத் தவறும்போது, கூடுதல் சிக்கல்களை உருவாக்குகிறது. தகவல் தொடர்புச் சீர்குலைவை ஊடகவியலாளர் ஒருவர் பின்வருமாறு விவரித்தார்: "*அன்றாட அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை நாங்கள் வழக்கறிஞர்களிடம் இருந்தே பெற வேண்டியுள்ளது. வழக்கறிஞர்கள் நீதிமன்ற அதிகாரிகளைப் போல் நடந்து கொள்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களின் கேள்விகளுக்கு அவர்களால் பதிலளிக்க முடியவில்லை.*"[56]

> "தகவலை யார் வழங்க வேண்டும் என்பது குறித்துத் தெளிவான வரையறை ஏதுமில்லை. நிபுணர் ஒருவரே தகவலை வழங்க வேண்டும். *ஆனால், அன்றாட அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை யாரிடமிருந்து பெறுவது என்பது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. வழக்கறிஞர்கள் தகவல்களை வழங்குகிறார்கள். ஆனால் அவர்கள் நிபுணர்கள் அல்ல. இதனால் எங்களுக்குக் கிடைப்பதும், [அதன் விளைவாகப்] பொதுமக்களுக்குச் சென்றடைவதும் மிகவும் குறைவான அல்லது திட்டமிடப்பட்ட தகவல்கள் மட்டுமே என நான் உணர்கிறேன்.*"[57]

இது ஏனைய இடங்களில் உள்ள அதிக வெளிப்படைத்தன்மை கொண்ட செய்முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. "*கொக்குத்தொடுவாயில் வழக்கறிஞர்கள் அச்செய்முறை பற்றிய தகவல்களை வழங்கியதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளுக்கும் ஆதரவளித்தனர். அத்துடன் அவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தனர். செம்மணியில் அவர்கள் அதிகாரிகள் போல் நடந்து கொள்கிறார்கள். கொக்குத்தொடுவாயில் சட்ட மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வத் தகவல்களை வழங்கினார். அகழ்வாராய்ச்சி நிபுணரும் தகவல்களைப் பகிர்ந்தார், [அங்கே] எங்களால் சுதந்திரமாகக் கேள்விகளைக் கேட்க முடிந்தது. செம்மணியில் இந்த நடைமுறை பின்பற்றப்படுவது இல்லை,*" என ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டார்.[58]

[54] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உடனும், அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெ. தற்பரன் உடனும் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில், செப்டெம்பர் 2025
[55] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்
[56] பத்திரிகையாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025
[57] பத்திரிகையாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025
[58] பத்திரிகையாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025

ஊடகவியலாளர்களுக்கு அகழ்வுத் தளத்திற்குச் செல்வதற்குப் பெரும்பாலும் நாளொன்றிற்குப் பதினைந்து முதல் இருபது நிமிடங்கள் வரை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது, மேலும், இது நீதிமன்ற அனுமதியைப் பொறுத்தே அமைகிறது. "*செய்தி சேகரிப்பதற்காக ஊடகங்களுக்கு நாளொன்றிற்கு இருபது நிமிடங்கள் வழங்க நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது, ஆனால், தகவல்களைத் திரட்டுவதற்கு இந்த நேரம் போதுமானதாக இல்லை.*"[59] ஆவணங்கள் இதில் முரண்பாடுகள் இருப்பதைக் காட்டுகின்றன. சில சந்தர்ப்பங்களில், ஊடகங்களுக்கு நாளொன்றிற்கு ஐந்து நிமிடங்கள் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பின்னர் தலையீடுகளுக்குப் பிறகு அது பதினைந்து முதல் இருபது நிமிடங்கள் வரை என நீட்டிக்கப்பட்டது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு ஊடகவியலாளருக்கான அடையாள அட்டைகளுடன் இந்திய ஊடகவியலாளர்கள் இருவர் அகழ்வுத் தளத்திற்கு வந்தமை, அனுமதி வழங்குவதில் நிலவும் எதேச்சையான போக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தியது. நீதிமன்ற அதிகாரிகளும், அவ்விடத்தில் பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிசாரும் ஆரம்பத்தில் ஒரு ஊடகவியலாளரை மட்டுமே நுழைய அனுமதித்து, மற்றவரைத் தன்னிச்சையாகத் தடுத்தனர்.[60] ஒருவர் புகைப்படம் எடுப்பவர் என்றும், மற்றவர் செய்தி ஆசிரியர் என்றும் அங்கு சென்றிருந்த உள்ளூர் ஊடகவியலாளர்கள் வாதிட வேண்டியிருந்தது. இத்தகைய விலக்கி வைக்கும் செயற்பாடு பகுத்தறிவிற்கு எதிரானது என்பதுடன், எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தும்.[61] இச்சம்பவம் விசாரணை நடைமுறைகளில் காணப்படும் *வேளைக்கேற்ப தற்காலிக* முடிவெடுக்கும் தன்மைக்கு ஓர் சிறந்த உதாரணம் ஆகும். தெளிவான தர்க்கமோ அல்லது சீரான நடைமுறைகளோ இன்றி அதிகாரிகள் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதை இது உறுதிப்படுத்துகிறது.

## நிறுவன ரீதியான தோல்வியும், அச்சுறுத்துதலும்

கண்காணிப்பு மற்றும் சட்ட ரீதியான அழைப்பாணைகள் உள்ளிட்ட அதிகரித்துள்ள அபாயங்களை உள்ளூர்த் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்கின்றனர். நிறுவன ரீதியான ஆதரவுக்கான அவசரத் தேவை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "*ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்குள்ள ஆபத்துகளையும், அவர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களையும் கையாளவும், அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கவும், ஓர் பாதுகாப்பு வலையமைப்பாகத் தொழிற்படவும், குறைந்தபட்சம் ஏதாவது காப்பு வலையமைப்பாவது இருக்க வேண்டும். அனைவருக்கும் பாதுகாப்புக் கிடைப்பதில்லை. சிலரால் வழக்கறிஞர்கள் போன்றோரின் உதவியைப் பெற இயலலாம். குறிப்பாக உள்ளூர் ஊடகவியலாளர்களுக்கு, அவர்களின் பணிகள் வெளிச்சத்திற்கு வந்து கவனிக்கப்படும்போது மட்டுமே பாதுகாப்புக் கிடைக்கிறது.*"[62] ஊடகவியலாளர்கள் அகழ்வுச் செயற்பாடுகளையும், அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகளையும் குறித்துச் செய்தி சேகரிக்கும்போது, சில நேரங்களில் புலனாய்வு அமைப்புகளின் நேரடிக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றனர். இது அச்சுறுத்தல் நிறைந்தவோர் சூழலை உருவாக்குகிறது. "*அடையாளம் காண்பதற்காகத் தடயப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட நாளில், அங்கு புலனாய்வு உத்தியோகத்தர்கள் வந்திருந்து [அங்கு வருபவர்களைக்] கவனித்துக் கொண்டிருந்தனர்,*" என ஊடகவியலாளர் ஒருவர் விவரித்தார்.[63]

ஊடகங்களுக்கான அனுமதி மேல் தெளிவான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கு எதிராக ஊடக அமைப்புகளிடம் இருந்து எவ்வித ஒருங்கிணைந்த எதிர்ப்பும் வெளியிடப்படவில்லை. "*ஊடக அமைப்புகளிடம் இருந்து எந்தப் பங்களிப்பும் இல்லை. இங்கு யாழ் ஊடக அமையம் உள்ளது. ஐந்து நிமிடங்கள் போதாது என்பதைத் தெரிவித்து, நேர ஒதுக்கீடு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன தொடர்பான பிரச்சினைகளை அவர்கள் எழுப்பியிருக்கலாம், யாழ் ஊடக அமையம் நீதிமன்றங்களை அணுகியிருக்க வேண்டும். பிரேரணை ஒன்றின் மூலம் தலையிட்டிருக்கலாம். இல்லை வேறு ஏதேனும் அமைப்போ அல்லது கூட்டமைப்போ அதைச் செய்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு யாரும் செய்யவில்லை. இறுதியாகப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மூலமாக மட்டுமே இது பெறப்பட்டது,*" என்று ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டார்.[64]

---

[59] சமூக உறுப்பினர் ஒருவருடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

[60] இச்சம்பவம் 02 செப்டெம்பர் 2025 அன்று நிகழ்ந்தது. அகழ்வுச் செயற்பாடுகள் குறித்து செய்தி சேகரித்த ஊடகவியலார் ஒருவர் அதனை விவரித்தார். செப்டெம்பர் 2025

[61] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்

[62] பத்திரிகையாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025

[63] பத்திரிகையாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025

[64] பத்திரிகையாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025

அடிப்படைத் தகவல் உட்கட்டமைப்பு ஒன்று இல்லாதது, இத்தகைய கட்டுப்பாடுகளை மேலும் மோசமாக்குகிறது. புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வாழ்பவர்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்கள், இவ்விசாரணை பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்கு, உத்தியோகபூர்வ வலைத்தளம், நாளாந்தச் செய்தியறிக்கைகள், அணுகக்கூடிய தரவுத்தளம் என வசதிகள் எதுவுமில்லை.

## 3) தொழினுட்பத் தோல்விகளும், குற்றவழக்குத் தொடர்வதிலுள்ள வெற்றிடமும்

திட்டமிட்ட, முறைமையான மீறல்கள் தொழினுட்பத் தோல்விகளை ஏற்படுத்துவதோடு, குற்றவழக்குத் தொடர்வதில் வெற்றிடம் ஒன்றையும் தோற்றுவிக்கின்றன. அவை முந்தைய தோல்வியுற்ற விசாரணைகளின் அதே முடிவுகளே தற்போதைய விசாரணைகளிலும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதோடு, உள்நாட்டு விசாரணைச் செய்முறைகளின் நம்பகத்தன்மை குறித்து பொதுமக்களிடையே சந்தேகத்தையும் உருவாக்குகின்றன.

### ஆதாரங்கள் உள்ள போதும் குற்றவழக்குத் தொடர்வதில் நிலவும் செயலற்ற தன்மை

"*குற்றம் இழைத்தவர்களை அடையாளம் காட்டவும், அது குறித்துப் பேசவும் சோமரத்ன ராஜபக்ஷ தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளதால், முதலில் அவருடன் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். பெயரிடப்பட்ட குற்றவாளிகள் குறித்து விசாரணை செய்வது நீதித்துறைச் செய்முறையில் நம்பிக்கையை உருவாக்கும்,*" என வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் வலியுறுத்தினார். இந்த நேரடியான அணுகுமுறையின் பயன் வெளிப்படையாகத் தெரிகின்றபோதும், அது தொடர்ந்தும் புறக்கணிக்கப்படுகிறது.

சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி அண்மையில் அரசாங்கத்துக்கு அனுப்பிய கடிதங்கள், நடந்தவை பற்றிய விரிவான தகவல்களையும், குற்றம் இழைத்தவர்களின் பெயர்களையும் வழங்க அவரது கணவர் தொடர்ந்தும் தயாராக இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் உள்நாட்டு நிறுவனங்கள் சமரசத்திற்கு உட்பட்டு நம்பகத்தன்மையை இழந்துள்ளதாக அவர் கருதுவதால், தகவல்களைச் சர்வதேசப் பொறிமுறை ஒன்றிடம் வழங்கவே அவர் விரும்புகிறார்.[65]

குற்றவழக்குத் தொடர்வதில் நிலவும் இவ்வெற்றிடம், விசாரணைகள் குற்றவாளிகளை அடையாளம் காணக்கூடியதாகவும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்ற மினசோட்டா நெறிமுறையின் தேவைப்பாட்டை மீறுகிறது.

### தொழினுட்ப நியமங்களும், பொதுமக்களின் நம்பிக்கையும்

அகழ்வுச் செயற்பாடுகளில் எவ்வித நியமங்கள் பின்பற்றப்படுகின்றன என்பது குறித்த தெளிவான பொதுத் தகவல் தொடர்பு ஏதும் இன்றி அகழ்வுப் பணிகள் தொடர்கின்றன. இது அச்செய்முறையின் நம்பகத்தன்மை குறித்துச் சந்தேகத்தை உருவாக்குகிறது. "*செம்மணியில் எல்லாம் திறந்த வெளியில் நடக்கிறது. அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் சிலர் ஏன் கையுறைகளைப் பயன்படுத்துவதில்லை என்பது பற்றியும், [மனித] எச்சங்களையும், தடயப் பொருட்களையும் ஏன் அவர்கள் தமது கைகளால் தொடுகிறார்கள் என்பது பற்றியும் மக்களுக்குச் சந்தேகங்கள் உள்ளன. இச்செய்முறை குறித்த விரிவான தகவல்கள் எதுவும் பொதுமக்களுக்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் வழங்கப்படவில்லை. இது ஓர் உள்நாட்டுச் செய்முறை என்பதால், உள்நாட்டுச் செய்முறைகளின் மீது அவநம்பிக்கை ஏற்படுவதற்கு இது வழிவகுக்கிறது,*" என ஊடகவியலாளர் ஒருவர் தனது அவதானிப்பைக் குறிப்பிட்டார்.[66]

### அகழ்வுத் தளத்தைப் பாதுகாத்தலும், ஆதாரங்களைப் பேணுதலும்

நடைமுறை சார்ந்த கவலைகளுக்கு அப்பால், அகழ்வுத் தளத்தின் பௌதிக ரீதியான பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விடயங்கள், ஆதாரங்களைப் பாதுகாத்துப் பேணுதல், தடயவியல் செயற்பாடுகளின் நேர்மைத்தன்மை என்பன குறித்துக் கடுமையான கேள்விகளை எழுப்புகிறது. இப்பகுதி

[65] 03 ஒகஸ்ட் 2025 எனும் திகதியிடப்பட்ட வீரகேசரி ஞாயிறு இதழிற் பிரசுரிக்கப்பட்டுள்ளதன்படி
[66] ஊடகவியலாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025

பருவமழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கிற்கு உட்படக்கூடிய அபாயத்தைக் கொண்டிருந்தும், அங்கு போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, அகழ்வுச் செய்முறை, மீட்கப்பட்ட மனித எச்சங்களின் சான்றாகத் தொழிற்படக்கூடிய தன்மை ஆகிய இரண்டையும் அச்சுறுத்துகிறது.




*செம்மணி அகழ்வுத் தளம்*

"*மழைக்காலம் வேகமாக நெருங்கி வருகிறது. அது [அகழ்வுச் செயற்பாடுகளுக்கு] ஓர் உண்மையான ஆபத்தை ஏற்படுத்துகிறது,*" என ஐங்கரன் குறிப்பிட்டார். "*உடனடியாக முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாது விட்டால், கடுமையான மழையினால் என்புக்கூட்டு எச்சங்களையும், பிற தடயப் பொருட்களையும் உள்ளடக்கிய முக்கிய ஆதாரங்கள் சேதமடையலாம் அல்லது இடமாற்றப்படலாம். எந்தவொரு நம்பகமான விசாரணைக்கும் இந்த ஆதாரங்கள் மிகவும் அவசியமானவை.*"[67] முறையான தடயப் பாதுகாப்புச் சங்கிலித் தொடரைப் பேணுவதும், சுயாதீனமான கண்காணிப்பினூடு அனுமதி அளிக்கப்படாத நபர்கள் அகழ்வுத் தளத்தினுள் நுழைவதைத் தடுப்பதும் மேலும் அக்கறை செலுத்த வேண்டிய விடயங்களாக உள்ளன.

உட்கட்டமைப்புச் சவால்கள் பன்முகத்தன்மை கொண்டவை. "*மாறிவரும் காலநிலை நிலைமைகள், போதிய வசதிகள் இல்லாமை, அவ்விடம் மரபாக உடல்கள் எரிக்கப்படும் ஓர் மயானமாக இருப்பது போன்ற காரணிகளால் செம்மணியில் நிலவும் சவால்கள் மேலும் மோசமாக்கப்படுகின்றன. அவ்விடம் ஓர் மயானமாக இருப்பது அகழ்வுத் தளம் எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பதையும் பாதிக்கிறது. கடுமையான வெப்பம், நிரந்தரக் கட்டமைப்பு ஏதும் இல்லாமை, காற்றினால் சேதமடையக்கூடிய தற்காலிகக் குடிசைகள் போன்றவை அகழ்வுச் செயற்பாடுகளைக் கடினமாக்கியுள்ளன. மேலும் அதிகமான என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட, அகழ்வு இடம்பெறும் தளமும் விரிவடைந்துகொண்டே செல்கிறது,*" என வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார்.[68]

ஏனைய அகழ்வுத் தளங்களுடன் ஒப்பிடும்போது, செம்மணியில் உள்ள குறைபாடுகளின் அளவு எவ்வளவு பெரியது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. இதுபற்றிச் சமூக உறுப்பினர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "*கொக்குத்தொடுவாயில் அகழ்வு இடம்பெறும் இடத்திற்கு மேல் பாதுகாப்புக்காக நிரந்தரக் கொட்டகை ஒன்று கட்டப்பட்டிருந்தது. ஆனால், இங்கே செம்மணியில்*

[67] கு. ஐங்கரன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[68] வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

*தற்காலிகக் கட்டமைப்புகள் மட்டுமே உள்ளன.*"[69] செம்மணியின் சதுப்பு நிலத்தன்மை பல்வேறு கட்டுமானச் சவால்களை அளித்தாலும், தற்போதைய அணுகுமுறையானது தடயவியல் பணிகளை வானிலை நிலைமைகளில் இருந்து முறையாகப் பாதுகாக்கப்பதற்குப் பதிலாக, அவற்றுக்கு ஏற்பத் திட்டமிட வேண்டிய கட்டாயத்தையே ஏற்படுத்துகிறது.

இப்பாதுகாப்புத் தோல்விகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. வெள்ளம் காரணமாக அகழ்வுச் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டியிருந்தால், குடும்பங்கள் மேலதிக காலதாமதத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதுடன், அது அகழ்வையும், விசாரணைச் செய்முறைகளையும் இன்னுமொரு வருடத்திற்கு நீட்டிக்கவும் கூடும். இது அடையாளம் காண்பதற்கும், சட்ட நடவடிக்கைகளுக்கும் அவசியமான தடயவியல் ஆதாரங்களின் நம்பகத்தன்மையைச் சிதைப்பதோடு, குடும்பங்கள் ஏற்கனவே பல பத்தாண்டுகளாக அனுபவித்து வரும் நீண்ட காத்திருப்பை மேலும் நீட்டித்து நிலைமையை மோசமாக்குகிறது. முன்கூட்டியே எதிர்வுகூறக்கூடிய வானிலை நிலைமைகளை எதிர்கொள்ளத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் தவறுதல், குடும்பங்களின் உண்மையறியும் உரிமையைக் காலவரையற்ற வாக்குறுதியாக மாற்றும் மற்றொரு முறைமையான தடையாகவே அமைகிறது.

**கட்டமைப்பு ரீதியான அக்கறை முரண்பாடுகள்**

நிறுவன ரீதியான பகுப்பாய்வு ஆழமான கட்டமைப்புச் சிக்கல்களை வெளிப்படுத்துகிறது. விசாரணைக்குப் பொறுப்பேற்றுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களமானது, ஆட்கள் காணாமல் போன சம்பவங்களில் முன்பு சம்பந்தப்பட்ட ஓர் அரச நிறுவனம் என்ற வகையில், இவ்விடயத்தில் உள்ளார்ந்த அக்கறை முரண்பாட்டை எதிர்கொள்கிறது.

> "காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரிடமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. *இது அக்குடும்பங்களுக்கு மனக்காயத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. எல்லாத் தகவல்களையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் வழங்க அவர்கள் தயங்குகின்றனர். பொலிஸ் திணைக்களமும், குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் அரச நிறுவனங்களாகும். இந்த நிறுவனங்களிடமிருந்து தமிழ் மக்கள் அச்சுறுத்தலையும், அடக்குமுறையையும், காணாமல் போகச் செய்யப்படுதலையும் எதிர்கொண்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணையை மக்கள் மீது விடுக்கப்படும் மறைமுக அச்சுறுத்தலாக அவர்கள் கருதுகின்றனர். மக்கள் தாமாக முன்வந்து நூறு வீத உண்மையையும் கூற மாட்டார்கள். முழுமையான உண்மை வெளிவராத சந்தர்ப்பங்கள் உள்ளன. இச்செய்முறையை மாற்ற வேண்டும். விசாரணையை நீதிமன்றத்தினூடு மேற்கொள்ளலாம்.*"[70]

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அணுகுமுறை இக்கவலைகளை மேலும் அதிகப்படுத்துகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர் ஒருவர் இதைப்பற்றிப் பின்வருமாறு விவரித்தார்: "*குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணை முறையானது, மனிதப் புதைகுழிக்கும் இராணுவத்திற்குமுள்ள தொடர்பைத் தவிர்த்து, அதற்கு வேறு காரணங்களைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டதாகத் தெரிகிறது. அவர்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம், அவர்கள் உடல்களை [அந்த இடத்தில்] அடக்கம் செய்தார்களா அல்லது மருத்துவமனையின் மனித எச்சங்கள் அங்கு புதைக்கப்பட்டிருக்கக் கூடுமா என வினவியுள்ளனர்.*"[71]

[69] சமூக உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025
[70] அகழ்வுச் செயற்பாடுகளைக் கவனித்துக் கொண்டு வரும் சமூக உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[71] வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

ஐங்கரன் குறிப்பிட்டதைப் போல், "*குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையில் ஈடுபடுவது, ஒரு திருடனே, திருடனைப் பிடிப்பதைப் போன்றது. இது [நீதிமன்ற] வழக்கு விசாரணையின் போது ஓர் பிரச்சினையாக மாறும்.*" முன்னைய காணாமல் போன சம்பவங்களுடன் தொடர்புடைய நிறுவனங்களிடமே விசாரணையை ஒப்படைப்பது, இயல்பாகவே அவர்களுக்கு இவ்விடயத்தில் உள்ள அக்கறை தொடர்பில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதோடு, விசாரணையின் நம்பகத்தன்மையைக் குறைத்து, குற்றமிழைத்தவர்கள் தொடர்ந்தும் தண்டனையிலிருந்து தப்பிப்பதையே உறுதி செய்கிறது.

# 4. குற்றம் இழைத்தவர்கள் தண்டனையில் இருந்து விலக்குப் பெற்றிருக்கும் நிலையில் இருந்து, பொறுப்புக்கூறலை நோக்கி: நீதிக்கான ஓர் வழிகாட்டி வரைபடம்

**"குற்றம் இழைத்தவரே [அக்குற்றம் தொடர்பான] விசாரணையை மேற்கொண்டால், நாம் அச்செய்முறையின் மீது எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?"**

**சமூக உறுப்பினர் ஒருவர்**[72]

மேலே ஆவணப்படுத்தப்பட்டுள்ள கவலைக்குரிய விடயங்கள், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத் தனித்த தோல்விகளை வெளிப்படுத்தவில்லை; மாறாக அவை நிறுவன ரீதியான முறையற்ற நடைமுறைகளையே பிரதிபலிக்கின்றன எனவே, அவை படிப்படியான சீர்திருத்தங்களை விடுத்து, அடிப்படை மாற்றத்தையே கோருகின்றன. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கோரிக்கைகள், இந்த ஆவணப்படுத்தப்பட்ட தோல்விகளுக்கான நேரடித் தீர்வாக அமைவதோடு, குற்றம் இழைத்தவர்கள் தண்டனையில் இருந்து விலக்குப் பெற்றிருக்கும் நிலையில் இருந்து பொறுப்புக்கூறலை நோக்கி நகர்வதற்கான வழிகாட்டி வரைபடம் ஒன்றையும் வழங்குகின்றன.

## 1) சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறைகள்

பொருள் பொதிந்த நீதி கிடைப்பதற்குச் சர்வதேசத் தலையீடு அவசியம் என்பதைப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன, இத்தலையீடு வெறும் தொழினுட்ப உதவிகளுடன் மட்டும் நின்றுவிடாது, பொறுப்புக்கூறல் வழிமுறைகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கையாகும். கண்காணிப்பாளர் ஒருவர் விளக்கியது போல், "இம்மனிதப் *புதைகுழிகள் இரண்டு இனங்களுக்கு இடையேயான மோதலின் விளைவாகும். அவ்வாறிருக்கும்போது, [அம்மோதலின்] ஓர் தரப்பாக இருக்கும் அரசே எவ்வாறு இதனை விசாரித்து இழப்பீடு வழங்க முடியும்?*"[73] இந்தப் பகுப்பாய்வானது, மோதலின் இன ரீதியான பரிமாணங்கள் விசாரணையின் நடுநிலைத்தன்மையில் இயல்பாகவே சிக்கல்களைத் தோற்றுவிப்பதால், வெளித்தரப்பு ஒன்றின் தலையீடு அவசியம் எனும் புரிதலை வெளிப்படுத்துகிறது.

மினசோட்டா நெறிமுறை, போர்ன்மவுத் நெறிமுறை உள்ளிட்ட சிறந்த சர்வதேச நடைமுறைகளைப் பின்பற்றித் தான் செயற்படுவதாகவும், மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்கான வரைவு நிலை நியமச் செயற்பாட்டு நடைமுறைகளைத் (SOPs) தான் ஊக்குவித்துள்ளதாகவும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் கூறுகிறது.[74] ஆயினும், தடயவியல் மானுடவியலாளர்களினதும், மரபணுவியலாளர்களினதும் பற்றாக்குறை, ஒருமுகப்படுத்தப்பட்ட

[72] அகழ்வுச் செயற்பாடுகளைக் கவனித்துக் கொண்டு வரும் சமூக உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[73] சமூக உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[74] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உடனும், அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெ. தற்பரன் உடனும் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில், செப்டெம்பர் 2025

தரவுத்தளங்கள் இல்லாமை, போதுமான ஆய்வுக்கூடங்கள் இல்லாமை, பயிற்சி பெற்ற மனிதப் புதைகுழி நிபுணர்களை விடுத்து தொல்பொருள் ஆய்வாளர்களை நம்பியிருத்தல் போன்ற இலங்கை எதிர்நோக்கும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய குறைபாடுகளையும் அது ஒப்புக்கொள்கிறது. இக்குறைபாடுகள், செம்மணி போன்ற கண்டுபிடிப்புகள் தொடர்பில் அரசின் வினைத்திறனுடன் செயற்படும் ஆற்றலை வெகுவாகக் குறைக்கிறது. கட்டமைப்பு ரீதியான இக்குறைபாடுகளைக் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் வெளிப்படையாக ஒப்புக்கொண்டமை, சர்வதேசத் தலையீட்டிற்கான பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கோரிக்கைக்குக் கூடுதல் நியாயத்தை வழங்குகிறது.

இக்கோரிக்கையானது, கடந்த முப்பதாண்டு காலமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ள நிறுவன ரீதியான தோல்விகளில் இருந்தே எழுகிறது. 1994 ஆம் ஆண்டில் இருந்து இருபதிற்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழித் தளங்கள் பகுதியளவு தோண்டப்பட்டுள்ளன. ஆயினும், எந்தவொரு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கும் அவர்களது அன்புக்குரியவர்களின் எச்சங்கள் எதுவும் இதுவரையிலும் கையளிக்கப்படவில்லை.[75] மன்னார் மற்றும் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் ஏற்பட்ட தோல்விகள், இத்தகைய திட்டமிட்ட, முறைமையான நடைமுறை வடிவங்களுக்குச் சான்றாக அமைகின்றன.

2018 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மன்னாரில் உள்ள சதொச மனிதப் புதைகுழித் தளத்தில் இடம்பெற்ற அகழ்வின்போது, சிறுபிள்ளைகளின் என்புக்கூடுகள் உள்ளிட்ட முந்நூறுக்கும் அதிகமான என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.[76] இருந்தபோதும், காபன் காலக்கணிப்பு தொடர்பில் ஏற்பட்ட முறையியல் ரீதியான பிணக்குகளாலும், 2022 ஆம் ஆண்டில் வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரும் வரை பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வழக்கறிஞர்களை வழக்கு நடவடிக்கைகளில் அனுமதிக்காத சட்ட ரீதியான சவால்களாலும், இம்மனிதப் புதைகுழி பற்றிய விசாரணை தடம் புரண்டது.[77] பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழக்கு நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு உள்ள உரிமையை உறுதிசெய்வதாக வவுனியா மேல் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் கிடைத்த வெற்றி அமைந்திருந்தாலும், அகழ்வுச் செயற்பாடுகள் இன்றுவரை முடங்கியே உள்ளன. அடிப்படையான முறையியல்சார் சிக்கல்கள் இச்செய்முறையைப் பாதிக்கின்றன. காபன் காலக்கணிப்பிற்காக மாதிரிகளைத் தேர்வுசெய்த முறை குறைபாடுகளை உடையதாகத் தோன்றுவதாகவும், ஆனால், எந்த முறையியலுக்கு அமைய மாதிரிகள் தேர்வுசெய்யப்பட்டன என்றோ, அதற்கான தர்க்க ரீதியான காரணம் என்ன என்றோ நீதிமன்றத்திற்கு எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை என வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் குறிப்பிட்டார்.[78]

2023 ஆம் ஆண்டில், முல்லைத்தீவில் முன்பு இராணுவ முகாம் ஒன்று இருந்த இடம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தில், அங்கு உடல்கள் புதைக்கப்பட்ட காலத்தை முறையான தடயவியல் விசாரணை ஏதுமின்றி முன்கூட்டியே அதிகாரிகள் தீர்மானித்தனர். இதுகுறித்து ஊடகவியலாளர் ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார்: "*கொக்குத்தொடுவாயானது 1984 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இயங்கிய ஓர் முன்னாள் இராணுவ முகாம் ஆகும், ஆனால், தடயவியல் விசாரணை ஏதுமன்றி, அவர்கள் [அப்புதைகுழியின்] காலத்தை முடிவு செய்தனர். அதனால், சுயாதீன விசாரணை ஏதுமன்றித் தடயவியல் அறிக்கையும் அதையே கூறியது.*"[79] இத்தளத்தின் இராணுவப் பின்னணி, யார் இக்குற்றத்தை இழைத்திருக்கலாம் என்பது பற்றி விசாரிப்பதற்குத் தெளிவான வழிகாட்டல்களை அளித்த போதும், குற்றம் இழைத்தவர்கள் குறித்து விசாரணை ஏதும் நடத்தப்படவில்லை. ஆதாரங்களைப் பின்தொடர்ந்து உண்மையை அறிவதற்கு நிறுவன ரீதியான எதிர்ப்பு உள்ளதையே இது வெளிப்படுத்துகிறது. அந்த ஆதாரங்கள் அரசுத் தரப்பினரை இக்குற்றத்துடன் தொடர்புபடுத்தக்கூடும் என்பதே அதற்கான காரணமாகும். மேற்குறிப்பிட்ட ஊடகவியலாளர் குறிப்பிட்டது போல், "*விசாரணைகளையும், [மனித எச்சங்களைத்] தோண்டியெடுக்கும் பணிகளையும் செய்வதற்குச் சரியான முறை ஏதுமில்லை. [குற்றமிழைக்கப்பட்ட] காலத்தைக் கணிப்பதற்கான சோதனைகள் இடம்பெறலாம். ஆனால், என்ன நடந்தது என்பது பற்றிப் [பாதிக்கப்பட்ட] குடும்பங்களிடம் இருந்து ஆலோசனைகள் ஏதும்*

[75] சோஃபி பிஸ்பிங்கின் *இலங்கையிலுள்ள மனிதப் புதைகுழித் தளங்கள்: வரலாறும், சட்டக் கட்டமைப்பும்*, இனம் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (ICES), 2023, மற்றும் CHRD, JDS, FOD மற்றும் ITJP, *இலங்கையின் மனிதப் புதைகுழிகளும், தோல்வியுற்ற அகழ்வுச் செயற்பாடுகளும்*, 2023, ஆகியவற்றைப் பார்க்கவும்.
[76] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்
[77] சோஃபி பிஸ்பிங், *இலங்கையிலுள்ள மனிதப் புதைகுழித் தளங்கள்: வரலாறும், சட்டக் கட்டமைப்பும்*, இனம் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (ICES), 2023, பக்கங்கள் 17-18 ஐக் காண்க.
[78] வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[79] ஊடகவியலாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025

*பெறப்படவில்லை; அதுபற்றி அவர்களுடன் உண்மையான கலந்துரையாடல்கள் ஏதும் இடம்பெறவில்லை.*"[80]

இத்தடங்கல் போக்குகள், சட்டக் கட்டமைப்புகள் காணப்படும் இடங்களில் கூடத் தொடர்கின்றன. சீர்திருத்தங்களுக்குச் சாதகமாக உள்ள சூழல்களில் கூட உள்நாட்டுச் சட்டக் கட்டமைப்புகளின் போதாமை தெளிவாகத் தெரிகிறது. ஈராக்கின் 2006 ஆம் ஆண்டின் மனிதப் புதைகுழிகள் விவகாரச் சட்டமானது, கணிசமான சர்வதேச மேற்பார்வையுடன், விரிவான நிலைமாற்று நீதிக் கட்டமைப்பு ஒன்றினுள் இயற்றப்பட்டது. இத்தகைய சாதகமான நிலைமைகள் இருந்தபோதும், பாரிய அட்டூழியக் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய விடயத்தில், அச்சட்டம் பொருள் பொதிந்த தீர்வொன்றை வழங்கத் தவறிவிட்டது.[81] உள்நாட்டுச் சட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படாமை, முறையான சட்டக் கட்டமைப்புகள் இல்லாமை, போதியளவு பயிற்சி பெற்ற பணியாளர்கள் இல்லாமை, அனுமதியளிக்கப்படாத நபர்களால் ஆதாரங்கள் அழிக்கப்படுதல் அல்லது திருடப்படுதல், பொதுவான அரசியல் உறுதிப்பாடற்ற தன்மை ஆகியவற்றின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது. அரசியல் நிலைமாற்றம் ஏற்பட்டும், சர்வதேச ஆதரவு இருந்தும் கூட உள்நாட்டுச் சட்டவாக்கத்தால் வெற்றிபெற முடியாதென்றால், இவ்விரு முன்நிபந்தனைகளும் இல்லாது, தமது நேர்மைத்தன்மையையும், நடுநிலைத்தன்மையையும் இழந்து சீர்குலைந்த நிலையிலுள்ள, ஏற்கனவே இருக்கும் நிறுவனங்களையே நம்பியிருக்கும் இலங்கையின் அணுகுமுறை பொறுப்புக்கூறலைச் சாத்தியமற்றதாக்குகிறது. தற்போதுள்ள சட்டக் கட்டமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதற்குச் சட்டத்திலுள்ள இடைவெளிகள் காரணமல்ல, மாறாகப் புதிய சட்டவாக்கத்தால் மட்டும் நிவர்த்தி செய்ய முடியாத, திட்டமிட்ட, முறைமையான தடைகளே இதற்குக் காரணம் என்பதை இந்த ஆவணம் எடுத்துக்காட்டுகிறது.

சர்வதேச மேற்பார்வையை வேண்டுமென்றே தவிர்ப்பதானது, கடந்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற இதுபோன்ற செய்முறைகளிலிருந்து ஏற்பட்ட ஓர் குறிப்பிடத்தகுந்த பின்னடைவு ஆகும். 1999 ஆம் ஆண்டில் செம்மணியில் இடம்பெற்ற அகழ்வுச் செயற்பாடுகள், கணிசமான சர்வதேசப் பங்களிப்புடன் இடம்பெற்றன. வெளித்தரப்புகளின் மேற்பார்வையை அச்சுறுத்தலாக அரசாங்கம் பெரிய அளவில் கருதாத ஓர் மாறுபட்ட அரசியல் சூழலையே இது காட்டுகிறது. வழக்கறிஞர் எஸ். நிரஞ்சன் குறிப்பிட்டது போல், 2009 ஆம் ஆண்டிற்கு முன், மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் விரிவான கண்காணிப்பிற்கு இலங்கை உட்படுத்தப்பட்டவில்லை. 2009 ஆம் ஆண்டில் ஆயுத மோதல் முடிவுக்கு வந்ததைத் தொடர்தே அது அவ்வாறான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. இலங்கையின் அரசியல் அதிகாரக் கட்டமைப்பு, சர்வதேச மேற்பார்வைக்குத் தற்போது காட்டும் எதிர்ப்பானது, முந்தைய விசாரணைகளின்போது இருக்காத பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் மீதான அச்சத்தினால் ஏற்பட்டதாகும். பிரச்சினை தொழினுட்ப இயலாமை அல்ல, மாறாகப் பயனுள்ள முடிவுகளை அளிக்கக்கூடிய சர்வதேசத் தலையீட்டைத் தடுப்பதற்கான, திட்டமிட்ட, அரசியல் ரீதியான தடையே என்பதை இம்மாற்றம் வெளிப்படுத்துகிறது.

உள்நாட்டுப் பொறிமுறைகளில் உள்ள இக்கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, இம்மீறல்கள் திட்டமிட்டு, முறைமையாகச் செய்யப்பட்டவை என்பதாலும், அரச நிறுவனங்கள் அவற்றில் சம்பந்தப்பட்டிருப்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாலும், எந்தவொரு சர்வதேசப் பொறுப்புக்கூறல் செய்முறையும் தனிப்பட்ட குற்றவாளிகளை மட்டுமல்லாது, இதில் ஆணைகளை வழங்குபவர்களுக்கு உள்ள பொறுப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குற்றவழக்குத் தொடுப்பது தொடர்பான உத்தியை வகுக்கும்போது, அதிலிருந்து, மூல மீறல்களில் சம்பந்தப்பட்ட உள்நாட்டு அரச நிறுவனங்கள், குறிப்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களமும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுகளும் விலக்கப்பட வேண்டும். ஏனெனில் அந்த நிறுவனங்கள் இச்செய்முறையில் சம்பந்தப்பட்டால், அது அடிப்படையான அக்கறை முரண்பாடுகளை ஏற்படுத்தும்.

சர்வதேசத் தடயவியல் நிபுணத்துவமானது, நம்பகத்தன்மையை இழந்துள்ள உள்நாட்டுச் செய்முறைகளுக்கு வெளிப்புற ஆதரவை மட்டும் வழங்காது, ஆரம்பத்திலிருந்தே விசாரணையை

[80] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம்

[81] அக்னஸ் கல்லமார்ட்டின் *நீதிக்குப் புறம்பாக நிறைவேற்றப்படும் அல்லது உடனடியாக நிறைவேற்றப்படும் அல்லது எதேச்சையாக நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் பற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை: உலகம் முழுவதும் காணப்படும், வரலாற்றின் பல்வேறு காலப்பகுதிகளைச் சேர்ந்த, பெரும் மனிதப் படுகொலைகளும், சட்டத்துக்குப் புறம்பான மரணங்களும் இடம்பெற்ற ஏராளமான இடங்களை முனைப்புறுத்தும், மனிதப் புதைகுழிகள்*, UN Doc.A/75/384, ஒக்டோபர் 2020, அடிக்குறிப்பு 87 இனைப் பார்க்கவும்.

வழிநடத்த வேண்டும். இவ்விசாரணை, சர்வதேசக் குற்றவழக்குத் தொடுக்கும் நியமங்களுக்கு ஏற்ப ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும், அதே நேரத்தில், குற்றம் நிகழ்ந்த இடம் தொடர்பில் முறைமையான ஆவணப்படுத்தல் செய்யப்படுவதையும் அது உறுதி செய்ய வேண்டும். தொடர்ந்தும் சாட்சியாக இருப்பதற்குச் சோமரத்ன ராஜபக்ஷ விருப்பம் தெரிவித்துள்ளமையையும், ஆணைகளை வழங்கும் கட்டமைப்பு தொடர்பில் அவருக்குள்ள விரிவான அறிவையும் கருத்தில் கொண்டு, குற்றம் நிகழ்ந்த இடங்கள், திகதிகள், ஆணைகளை வழங்கிய அதிகாரிகள், புதைத்ததன் நடைமுறைகள் என்பன குறித்து அவரது விரிவான சாட்சியத்தைப் பெற்றுக்கொள்வதற்குச் சர்வதேசக் குற்றவியல் வழக்கறிஞர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

## 2) சர்வதேசத் தொழினுட்ப உதவியும், ஆற்றலை விருத்தி செய்து மேம்படுத்துதலும்

செயற்படும் நிலையிலுள்ள சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்று இல்லாத நிலையில், சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் வேண்டும் என்பதற்கான அழுத்தத்தைத் தொடர்ந்தபடியே, உடனடித் தொழினுட்ப உதவியைச் சர்வதேசச் சமூகம் வழங்க வேண்டும். முந்தைய விசாரணைகளின் நம்பகத்தன்மையையும், செயற்றிறனையும் பலவீனப்படுத்தியுள்ள, தடயவியல் மற்றும் புலனாய்வு தொடர்பான முக்கியமான குறைபாடுகளைக் கையாள்வதற்கான ஓர் இடைக்காலப் பாதுகாப்பாக இத்தொழினுட்ப உதவி அமைய வேண்டும். மனிதப் புதைகுழிகள் தொடர்பான ஒன்றிற்கும் மேற்பட்ட அறிக்கைகளில் இக்குறைபாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.[82] மேலும், இக்குறைபாடுகளைக் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமும் ஒப்புக்கொண்டுள்ளது.[83]

இந்த ஆவாதரவானது, சர்வதேசத் தொழினுட்ப உதவியுடன், ஓர் விரிவான தேசிய டி.என்.ஏ தரவுத்தளத்தை நிறுவுவதில் கவனம் செலுத்த வேண்டும். மாதிரிகளைச் சேகரிப்பதற்கும், சேமிப்பதற்குமான தரப்படுத்தப்பட்ட நெறிமுறைகளை இச்சர்வதேசத் தொழினுட்ப உதவி உள்ளடக்கியிருக்க வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் இருந்து பெறப்பட்ட இறப்பிற்கு முந்தைய தரவுகளை, அடையாளம் காணும் ஆற்றலை அதிகரிக்கும் நோக்கில் இத்தரவுத்தளத்துடன் முறைமையாக ஒருங்கிணைப்பதையும் இச்சர்வதேசத் தொழினுட்ப உதவிகள் ஏற்படுத்த வேண்டும். வழக்கறிஞர் நிரஞ்சன் குறிப்பிட்டதைப் போல், "*இறப்பிற்கு முந்தைய தரவுகளுக்கான ஆய்வுகூடமொன்று தேவை. குடும்பங்கள் அதை எதிர்பார்க்கின்றன. அரசாங்கமும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமும் அதை அமைக்கச் செயற்பட வேண்டும்.*" டி.என்.ஏ தரவுகளையும், இறப்பிற்கு முந்தைய தரவுகளையும் முறைமையாகச் சேகரிக்கும் செய்முறைகள் ஏதும் நடைமுறையில் இல்லை என்பதும், தேசியத் தரவுத்தளம் ஒன்றும், ஆய்வுகூடம் ஒன்றும் அவசரமாகத் தேவைப்படுகிறது என்பதும், முறைமையான செய்முறைகளின் இன்மையைத் தெளிவாகக் காட்டுகிறது.[84]

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மனிதப் புதைகுழி விசாரணைகளுக்கான சிறந்த நடைமுறைகள் தொடர்பில் தடயவியல் மானுடவியலாளர்களுக்கும், தொல்பொருள் ஆய்வாளர்களுக்கும், நோயியல் நிபுணர்களுக்கும் சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆதாரங்களைப் பாதுகாக்கும் நுட்பங்களும், முறையான அகழ்வாராய்ச்சி வழிமுறைகளும், ஆதாரங்களின் பொறுப்புச் சங்கிலி தொடர்பான நடைமுறைகளும், சர்வதேச ரீதியில் குற்றவழக்குத் தொடுப்பதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆவணப்படுத்தல் தொடர்பான நியமங்களும் இப்பயிற்சித் திட்டங்களில் உள்ளடங்க வேண்டும்.

டி.என்.ஏ பகுப்பாய்வையும், வெளிப்புறச் சோதனைக்கான மாதிரித் தயாரிப்பையும், தடயவியல் சீர்மையைப் பேணும் வகையில் ஆதாரங்களின் நீண்டகாலச் சேமிப்பையும் உள்ளடக்கிய சர்வதேச அங்கீகாரம் பெற்ற தடயவியல் வசதிகளை ஏற்படுத்துதலும் இத்தொழினுட்ப உதவியில் உள்ளடங்கலாம். மேலும் இத்தொழினுட்ப உதவியானது, மினசோட்டா நெறிமுறைக்கும், போர்ன்மவுத் நெறிமுறைக்கும் இணங்கும் வகையில் நியமச் செயற்பாட்டு நடைமுறைகளை உருவாக்குவதற்கு உதவ வேண்டும். அத்துடன் அவை, விசாரணைச் செய்முறை முழுவதும்

[82] சோஃபி பிஸ்பிங்கின் *இலங்கையிலுள்ள மனிதப் புதைகுழித் தளங்கள்: வரலாறும், சட்டக் கட்டமைப்பும்*, இனம் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (ICES), 2023, மற்றும் CHRD, JDS, FOD மற்றும் ITJP, *இலங்கையின் மனிதப் புதைகுழிகளும், தோல்வியுற்ற அகழ்வுச் செயற்பாடுகளும்*, 2023, ஆகியவற்றைப் பார்க்கவும்.

[83] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உடனும், அதன் நிர்வாகப் பணிப்பாளர் ஜெ. தற்பரன் உடனும் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில், செப்டெம்பர் 2025

[84] காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், சமூக உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள் என்பவர்களுடனான நேர்காணல்களின் அடிப்படையில்

பயனுள்ள வகையில் குடும்பங்களின் பங்கேற்பையும், வெளிப்படைத்தன்மையையும், சாட்சிகளின் பாதுகாப்பையும் உறுதிசெய்ய வேண்டும்.




*அகழ்ந்து எடுக்கப்படும் ஓர் சிசுவின் என்புக்கூடு*

நிறுவனங்கள் உண்மையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் இணைத்துச் செயற்படும்போது தொழினுட்ப உதவி எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும் என்பதைக் கொலம்பியாவின் காணாமல் போனவர்களாகக் கருதப்படும் நபர்களைத் தேடுவதற்கான தேசிய ஆணைக்குழு (UBPD) நிரூபிக்கிறது. நடைமுறைப்படுத்துவதில் சவால்கள் இருந்தபோதும், காணாமல் போன ஆட்களுக்கான சர்வதேச ஆணைக்குழுவிடம் (ICMP) இருந்தும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அலுவலகத்திடம் (OHCHR) இருந்தும், கொலம்பியாவின் காணாமல் போனவர்களாகக் கருதப்படும் நபர்களைத் தேடுவதற்கான தேசிய ஆணைக்குழு தொழினுட்ப உதவியைப் பெறுகிறது. அதே நேரத்தில் அந்த ஆணைக்குழு குடும்ப அமைப்புகளுடனும், குடிசார் சமூகக் குழுக்களுடனும் முனைப்புடன் ஒத்துழைத்து, இச்செயற்பாட்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் முக்கிய வகிபாகத்தை அங்கீகரிக்கும் கூட்டு வேலைத் திட்டங்களையும் உருவாக்குகிறது.[85] நிறுவனங்கள் அதிகாரத்துவ நடைமுறைகளை விட உண்மையான குடும்பப் பங்கேற்பிற்கு முன்னுரிமை அளிக்கும்போது, தொழினுட்ப உதவியால் நீதி தொடர்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைக் கொலம்பிய மாதிரி காட்டுகிறது.

தொழினுட்ப உதவியானது சர்வதேசப் பொறுப்புக்கூறல் வழிமுறைகளுக்கு மாற்றாக அல்லாது, அவற்றை முழுமைப்படுத்துவதாக இருக்க வேண்டும். மேலும், குற்றவழக்குத் தொடுக்கும் அதிகாரத்துடன் கூடிய சுயாதீனமான மேற்பார்வையை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்கான சாட்டாக, ஆற்றலை விருத்தி செய்து மேம்படுத்துதல் மாறாதிருப்பதைச் சர்வதேச அமைப்புகள் உறுதிசெய்ய வேண்டும். பல பத்தாண்டுகளாகப் பதில்களுக்காகக் காத்திருக்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நன்மைகளை உடனடியாக வழங்குவதோடு, எதிர்காலப் பொறுப்புக்கூறலுக்கான ஆதார அடித்தளங்களை வலுப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

---

[85] https://colombiapeace.org/colombias-unit-for-the-search-of-disappeared-persons/ எனும் இணைப்பைப் பார்க்கவும். மோரிஸ் டிட்போல்-பின்ஸ், *நீதிக்குப் புறம்பாக நிறைவேற்றப்படும் அல்லது உடனடியாக நிறைவேற்றப்படும் அல்லது எதேச்சையாக நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் பற்றிய சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை: சட்டவிரோதக் கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் உரிமைகள்*, A/HRC/59/54, ஏப்ரல் 2025, பத்தி 21, இனையும் பார்க்கவும்.

### 3) உண்மையும், திட்டமிட்டு, முறைமையாகச் செய்யப்பட்ட மீறல்களிற்கான அங்கீகாரமும்

தனிநபர்கள் மீது குற்றவழக்குத் தொடுக்கப்படுவதற்கு அப்பால், தமிழ்ச் சமூகத்திற்கு எதிரான மீறல்களின் திட்டமிட்டு, முறைமையாக நிகழ்த்தப்பட்ட தன்மையை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோருகின்றன. "*இது நாங்கள் தமிழர்கள் என்பனாலேயே செய்யப்பட்டது, [அதனாலேயே] தமிழர்களுக்கு எதிரான இந்த அட்டூழியங்களை அரசு செய்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்படித்தான் இது மீண்டும் நிகழ்வதை எம்மால் நிறுத்த முடியும்,*" எனச் சமூக உறுப்பினர் ஒருவர் வலியுறுத்திக் கூறினார்.[86] கட்டமைப்பு ரீதியான அங்கீகாரம் தேவைப்படும் அரச வன்முறையின் பரந்துபட்ட வடிவங்களில் இருந்து, தனித்த சம்பவங்களைப் பிரிக்க முடியாது என்ற புரிதலை இக்கோரிக்கை பிரதிபலிக்கிறது.

பல பத்தாண்டுகளாகக் குற்றம் இழைத்தவர்களுக்குத் தண்டனையில் இருந்து விலக்கு அளிக்க உதவிய நிறுவன ரீதியான தோல்விகளை ஒப்புக்கொள்வதையும் இக்கோரிக்கை உள்ளடக்கியுள்ளது.

> "*அரசியல் உறுதிப்பாடு இருந்தால், ஏனையவை எல்லாம் [அதைத்] தொடர்ந்து நிகழும். ஆனால், எந்த அரசாங்கமும் இராணுவத்தில் பிழை கண்டுபிடிப்பதற்குத் துணிவதில்லை. அவ்வாறு செய்திருந்தால், ஏற்கனவே களத்தில் சுயாதீனமான கண்காணிப்பாளர்கள் இருந்திருப்பார்கள்.*"[87]

செம்மணியில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள சட்டவிரோதமாக இடம்பெற்ற கொலைகளையும், ஆட்கள் காணாமல் போன சம்பவங்களையும் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டும். அத்துடன், குற்றம் இழைத்தவர்கள் நிறுவன ரீதியாகப் பாதுகாக்கப்பட்டதற்கும் அரசு பொறுப்பேற்க வேண்டும். திட்டமிட்டு, முறைமையாக விலக்கி வைத்தலின் ஊடும், அச்சுறுத்துதலின் ஊடும், குற்றவழக்குத் தொடர்வதில் நிலவும் செயலற்ற தன்மையின் ஊடும், கடந்த காலச் செய்முறைகள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியை வழங்குவதில் தோற்றுவிட்டன என்பதை ஏற்றுக்கொள்வதையும் இந்த அங்கீகாரம் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

ஊடகவியலாளரொருவர் வலியுறுத்திக் கூறியது போல், "*[மீட்கப்பட்ட] மனித எச்சங்கள் யாருடையவை என்பதை அடையாளம் காண இயலாது போனாலும், இது ஓர் சட்டவிரோதமான செயல் என்பதும், ஓர் கொலைச் செயல் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இதற்குக் கூட்டாகப் பொறுப்புக்கூறப்பட வேண்டும். அதை அரசாங்கம் செய்ய வேண்டும். [நடந்ததை] ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், அரசாங்கத்திடமிருந்தும், இராணுவத்திடமிருந்தும், சிங்களவர்களிடமிருந்தும், மறுப்பு மட்டுமே இன்னும் அதிகமாக வெளிப்படுகிறது. கூட்டுப் பொறுப்புக்கூறல் அவசியமாகும். அக்காலப்பகுதியில் அவ்விடத்தில் இருந்தவர்கள் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். அங்கிருந்த அதிகாரிகள் யார், அங்கு எந்த முகாம் இருந்தது [போன்றவற்றைக் கண்டறிய வேண்டும்.] அதன் பின்னரே நீதி [கிடைப்பது] சாத்தியமாகும்,*"[88]

உண்மையை வெளிப்படுத்தும் செய்முறைகள், மீறல்களின் பின்னணி குறித்தும், அவற்றின் அளவு குறித்தும், அவை ஏற்படுத்திய பாதிப்புக் குறித்தும் முழுமையான விபரங்களை வழங்குவதன் மூலம் குற்றவழக்குத் தொடுக்கும் பொறிமுறைகளுக்குத் துணையாக இருக்க வேண்டும். இச்செய்முறைகள் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை மையப்படுத்தி அமைய வேண்டும். அத்துடன் அவை, திட்டமிட்டு,

[86] அரியாலைச் சமூக உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[87] அரியாலையைச் சேர்ந்த வழக்கறிஞரும், சமூக உறுப்பினருமான கு. ஐங்கரன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[88] அகழ்வுச் செயற்பாடுகள் குறித்துச் செய்தி சேகரித்துத் தெரிவிக்கும் ஊடகவியலாளர் ஒருவர் உடனான நேர்காணல், செப்டெம்பர் 2025

முறைமையாக நிகழ்த்தப்பட்ட வன்முறைக்கு வழிவகுத்த நிறுவன ரீதியான கட்டமைப்புகளையும் ஆவணப்படுத்த வேண்டும். மீறல் சம்பவங்களின் நம்பகமானதும், உத்தியோகபூர்வதுமான பதிவொன்றை உருவாக்குவதே இதன் நோக்கமாக இருக்க வேண்டும். இப்பதிவு வரலாற்று மறுப்பைத் தடுப்பதோடு, உண்மையை அறிந்துகொள்வதற்குப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதாக அமையவும் வேண்டும்.

## 4) பயனுள்ள வகையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பங்கேற்பும், அவர்களுக்கான பாதுகாப்பும்

விசாரணைச் செய்முறைகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டு, வெறுமனே அவதானிப்பாளர்களாக மட்டுமேயுள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தாம் அச்செய்முறைகளில் பயனுள்ள வகையில் பங்குபற்றுவதற்குத் தேவையான அடிப்படை மாற்றத்தைக் கோருகின்றன. அவர்கள் இவ்வாறு விலக்கி வைக்கப்பட்டிருத்தலானது, ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட முன்னுதாரணங்களையும், சர்வதேசக் கடப்பாடுகளையும் மீறுவதுடன், விசாரணையின் நம்பகத்தன்மையையும் வலுவிழக்கச் செய்கிறது.

குடும்பங்கள் இச்செய்முறையில் பயனுள்ள வகையில் பங்குபற்ற வேண்டுமெனில், அவர்களால் அகழ்வு இடம்பெறும் தளத்திற்கு நேரடியாகச் செல்ல இயல வேண்டும். அதன்போது அவர்களுக்கு உளவியல் ரீதியான ஆதரவையும், பண்பாட்டு ரீதியான ஆதரவையும் வழங்கக்கூடிய முறைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அகழ்வுச் செயற்பாடுகளை அவதானிப்பதற்கும், தடயப் பொருட்களை அடையாளம் காணும் செயற்பாட்டில் பங்குபற்றுவதற்கும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்கள் குறித்துச் சாட்சியங்களை வழங்குவதற்கும் குடும்பங்களுக்கு வழிவகை செய்யப்பட வேண்டும். குடும்பங்களின் பங்கேற்பு என்பது வெறுமனே ஓர் உரிமை மட்டுமல்ல, அது விசாரணையின் நம்பகத்தன்மைக்கான ஓர் நடைமுறைத் தேவை என்பதை மினசோட்டா நெறிமுறை வலியுறுத்துகிறது, ஏனெனில், பாதிக்கப்பட்டவர்களின் அடையாளங்கள், அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சூழ்நிலைகள், அவர்களை வேறுபடுத்தும் தனித்துவமான சிறப்பியல்புகள் போன்ற விடயங்கள் தொடர்பான முக்கியமான தகவல்கள் குடும்பங்களிடமே உள்ளன.

குடும்பங்கள் இச்செய்முறையில் பங்குபற்றுவதற்குத் தற்போது தடையாக இருக்கும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள கண்காணிப்புச் செயற்பாடுகளையும், அச்சுறுத்தல்களையும் பாதுகாப்பு நடவடிக்கைகள் கையாள வேண்டும். சர்வதேசச் சட்டத்தின் கீழ் வரும் அச்சுறுத்தல்கள் இல்லாதிருப்பதை உறுதி செய்யும் கடப்பாடுகளுக்கு இணங்குவதைக் கண்காணிக்கும் அதேவேளையில், சாட்சிகளின் பாதுகாப்பையும் சர்வதேசக் கண்காணிப்பு உறுதி செய்ய வேண்டும். குடும்பங்கள் "இருபத்து நான்கு மணிநேரக் கண்காணிப்பு" குறித்துப் புகாரளிக்கும் நிலைமையும், தமக்கான நீதியை நாடுவதில் இருந்து பெற்றோர்களைப் பிள்ளைகள் தடுக்கும் நிலைமையும் காணப்படும் தற்போதைய சூழல், பாதுகாப்புப் பொறிமுறைகளுக்கான அவசரத் தேவையை வெளிப்படுத்துகிறது.

இச்செய்முறை முழுவதும் பண்பாட்டு ரீதியான தேவைகளும், சமய ரீதியான தேவைகளும் மதிக்கப்பட வேண்டும் என்பதைப் போர்ன்மவுத் நெறிமுறை கோருகிறது. பல பத்தாண்டுகளாகக் குடும்பங்களுக்கு கூட்டாகச் சேர்ந்து துக்கம் அனுசரிப்பது மறுக்கப்பட்டுள்ளது. இறப்புடனும், நினைவுகூர்தலுடனும் தொடர்பான பண்பாட்டு ரீதியான நடைமுறைகளை மேலும் ஒடுக்குவதற்குப் பதிலாக, அவற்றை எளிதாக்குவதாக விசாரணைச் செய்முறைகள் அமைய வேண்டும்.

குடும்பங்களின் பங்கேற்பு முறையாகத் திட்டமிடப்படாது மோசமான முறையில் நிர்வகிக்கப்படின், அது பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இரண்டாம் நிலை மனக்காயத்தை ஏற்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளதைச் சர்வதேச நிபுணத்துவம் உறுதிப்படுத்துகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் நீதிக்குப் புறம்பாக நிறைவேற்றப்படும் அல்லது உடனடியாக நிறைவேற்றப்படும் அல்லது எதேச்சையாக நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் பற்றிய சிறப்பு அறிக்கையாளர், அடையாளம் காண்பதில் மட்டும் அதிக கவனம் செலுத்துவது, "அவர்களின் வலியைத் தீவிரப்படுத்தக் கூடும். அது கிட்டத்தட்ட இரண்டாம் நிலை அதிர்ச்சியை உருவாக்கும்," என்று 2020 ஆம் ஆண்டில் எச்சரித்திருந்தார். இதற்குத் தீர்வாக, மனிதப் புதைகுழிகளுக்குச் சட்ட ரீதியான பாதுகாவலராகச் செயற்படச் சட்ட அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார். இவ்வமைப்பு, அரசின் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் அதேவேளையில், இதில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகளையும் கையாள

வேண்டும் என அவர் கூறினார்.[89] மேலும், மனிதப் புதைகுழிகளை நிர்வகிக்க அவற்றிற்கான தனிப்பட்ட முகாமையாளர்களை நியமிப்பது அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தவதோடு, குடும்பங்களுக்குத் தெளிவான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளையும் வழங்கும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.[90] விலக்கி வைக்கப்படுதலையும், அகழ்வுத் தளத்திற்குச் செல்வதற்கு எதேச்சையான கட்டுப்பாடுகளையும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் செம்மணியில், தற்போது இடம்பெறும் ஒழுங்கற்ற செயற்பாடுகளைச் சரிசெய்ய இத்தகைய நிறுவனக் கட்டமைப்புகள் உதவும்.

தற்போது வழக்கறிஞர்கள் மூலம் துண்டு துண்டாகக் கிடைக்கும் தகவல்களை நம்பியிருப்பதைப் போல் அல்லாமல், முறைமையாகத் தகவல்களைப் பகிரக்கூடிய தகவல் தொடர்பு அமைப்புகள் தமிழ் மொழியில் நிறுவப்பட வேண்டும். புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வாழும் குடும்பங்களுக்கு, விசாரணையில் ஏற்படும் முன்னேற்றங்கள் பற்றியும், அதில் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகள் பற்றியும் உத்தியோகபூர்வ தகவல்கள் கிடைக்கப்பெறுதல் வேண்டும். அடிப்படைத் தகவல் தொடர்பு உட்கட்டமைப்பு ஏதும் இல்லாதிருப்பது வெளிப்படைத்தன்மைக்கான தேவைகளை மீறுவதோடு, குடும்பங்கள் தமக்குள்ள தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்துவதையும் தடுக்கிறது.

முந்தைய விசாரணைகளில் ஏற்கனவே ஆவணப்படுத்தப்பட்டுள்ள நிகழ்வுகள் குறித்து மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்புவதன் மூலம் குடும்பங்களுக்கு மீண்டும் மனக்காயத்தை ஏற்படுத்துவதை விசாரணைச் செய்முறைகள் தவிர்க்க வேண்டும். 2003 ஆம் ஆண்டின் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை போன்ற வரலாற்று ஆவணங்கள் இருக்கும் இடங்களில், குடும்பங்களை அவர்களது மனக்காயங்களை மீள அனுபவிக்க நிர்ப்பந்திக்கும் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்துவதற்குப் பதிலாக, ஏற்கனவே உள்ள இதுபோன்ற ஆவணங்களைக் குற்றம் இழைத்தவர்களை அடையாளம் காண்பதற்குப் பயன்படுத்துவதற்குப் புலனாய்வாளர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்த அணுகுமுறை, குடும்பங்கள் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளனர் என்பதையும், அவர்களில் பலர் கடந்த பல்லாண்டுகளில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் சாட்சியம் அளித்துள்ளனர் என்பதையும் அங்கீகரிக்கிறது. மேலும், அவர்களின் அன்பிற்குரியவர்கள் காணாமல் போன சூழ்நிலைகளை மீண்டும் மீண்டும் விவரிப்பதனால் அவர்களுக்கு ஏற்படும் உள ரீதியான பாதிப்பில் இருந்து அவர்களை அது பாதுகாக்கிறது. தற்போதுள்ள ஆவணங்கள் அனைத்தையும் முறைமையாக எண்மயப்படுத்தி (டிஜிட்டல் மயப்படுத்தி) ஆவணப்படுத்தும் காப்பக வசதிகள் ஏற்படுத்தப்படின், புலனாய்வாளர்களால் தமக்குத் தேவையான தகவல்களை அங்கிருந்து பெற்றுக்கொள்ள இயலும். இதனால், தனது பதிவுகளைப் பாதுகாக்கத் தவறிய ஓர் அரசிற்காகக் குடும்பங்கள் அந்நிறுவனத்தின் (அரசின்) நினைவகமாகச் செயற்பட வேண்டிய தேவை இருக்காது.

## 5) உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் தேவையும், இது மீண்டும் நிகழாமையை உறுதிசெய்தலும்

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கால வரையறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. கால வரையறைகளின் காரணமாக விசாரணைகளில் ஏற்படும் தாமதமானது, நீதியை மறுப்பதற்குச் சமமாகிறது. "*காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய், தந்தையரில் பலர் இறந்து விட்டனர். நீதி கிடைக்காவிட்டால், தமக்கு எதிர்காலம் இல்லை என்றும், சர்வதேசச் சமூகம் தம்மைக் கைவிட்டு விட்டது என்றும் தமிழ் மக்கள் நினைப்பார்கள்,*" என்று சமூக உறுப்பினர் ஒருவர் எச்சரித்தார்.[91] தப்பிப்பிழைத்தவர்கள் முதுமை அடைவதும், சாட்சிகள் இறப்பதும், ஆதாரங்கள் சிதைவடைவதும் நீதிக்கான வாய்ப்புகளைக் குறைத்துக்கொண்டே வருகின்றன.

இயலாமையின் காரணமாக உடைந்து அழத் தொடங்கிய தாய் ஒருவர் பின்வருமாறு தனது விரக்தியை வெளிப்படுத்தினார்: "*குறைந்தபட்சம் நாம் உயிருடன் இருக்கும்போதாவது நீதியைக் காண நான் விரும்புகிறேன். எமக்கு நீதி மட்டுமே வேண்டும்.*"[92] அவர்கள் பல பத்தாண்டுகளாகக்

[89] அக்னஸ் கல்லமார்ட், *நீதிக்குப் புறம்பாக நிறைவேற்றப்படும் அல்லது உடனடியாக நிறைவேற்றப்படும் அல்லது எதேச்சையாக நிறைவேற்றப்படும் மரண தண்டனைகள் பற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை: உலகம் முழுவதும் காணப்படும், வரலாற்றின் பல்வேறு காலப்பகுதிகளைச் சேர்ந்த, பெரும் மனிதப் படுகொலைகளும், சட்டத்துக்குப் புறம்பான மரணங்களும் இடம்பெற்ற ஏராளமான இடங்களை முனைப்புறுத்தும், மனிதப் புதைகுழிகள்*, UN Doc.A/75/384, ஒக்டோபர் 2020, பத்தி 30

[90] மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதே மூலம், பத்தி 68

[91] சமூக உறுப்பினர் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

[92] காணாமல் போன நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

காத்திருப்பதையும், நீதி ஒருபோதும் கிடைக்காது என்ற அவர்களின் அச்சத்தையுமே இது வெளிக்காட்டுகிறது. தொழினுட்ப ரீதியான தடைகளையும், அதிகார எல்லை தொடர்பான பிணக்குகளையும் காரணம் காட்டிப் பொறுப்புக்கூறுவதைக் காலவரையறை இன்றித் தள்ளிப்போட்ட, முந்தைய மனிதப் புதைகுழி விசாரணைகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள நிறுவன ரீதியான தாமதங்கள், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் தேவையை மேலும் மோசமாக்குகிறது.

வெறுமனே கடந்த காலக் குற்றங்களுக்குத் தீர்வுகாண்பதற்காக மட்டுமல்லாது, எதிர்காலத்தில் இத்தகைய மீறல்கள் நிகழாமல் தடுப்பதற்கும் பொறுப்புக்கூறல் அவசியமானது என்பதைக் குடும்பங்கள் புரிந்துகொள்கின்றன. "*பொறுப்புக்கூறலின் ஊடாக மட்டுமே [இச்சம்பவங்கள்] மீண்டும் நிகழாது [தடுக்க முடியும்]. இது இப்படித் தாமதமாகிக் கொண்டே போனால், எமக்கு நீதி கிடைக்காது,*" என்று தாய் ஒருவர் குறிப்பிட்டார்."[93] இது குறித்து ஐங்கரன் கூறுகையில், "*குறைந்தபட்சம் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்திலாவது குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால், [இத்தகைய மீறல்கள்] மீண்டும் நிகழாமல் தடுத்திருக்க முடியும்,*" என்று குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படாமல், அவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டமைக்கும், தொடரும் மீறல்களுக்கும் இடையிலான தொடர்பு சாட்சியங்களில் மிகத் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. செம்மணி விவகாரத்தில் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படாவிட்டால், வன்முறைச் சுழற்சி காலவரையின்றித் தொடரும் எனக் குடும்பங்கள் அஞ்சுகின்றன. மீண்டும் இத்தகைய குற்றங்கள் நிகழாது என்பதற்கான உத்தரவாதங்களுக்கு, தனிப்பட்ட நபர்கள் மீது குற்றவழக்குத் தொடர்வதைத் தாண்டிய கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மீறல்கள் திட்டமிட்டு, முறைமையாக இடம்பெறுவதற்குத் துணையாக இருந்த நிறுவன ரீதியான பொறிமுறைகளை அகற்றுவதும், பாதுகாப்புப் படைகளைக் கண்காணிப்பதற்குச் சுயாதீனமான மேற்பார்வை அமைப்புகளை நிறுவுவதும், பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ள சமூகங்களுக்கான வினைத்திறன் மிக்க பாதுகாப்பு முறைமைகளை உருவாக்குவதும் இம்மாற்றங்களில் அடங்கும். நிறுவனக் கலாச்சாரத்தைக் குற்றம் இழைத்தவர்கள் தண்டனையிலிருந்து விலக்குப் பெறுவதை அனுமதிக்கும் நிலையிலிருந்து, பொறுப்புக்கூறுவதற்கு மாற்றுவதே இதன் விரிவான நோக்கமாக இருக்க வேண்டும்.

இருபத்தைந்து நபர்கள் காணாமல் போனதற்குக் காரணமானவர்களை அடையாளம் கண்ட, பாதுகாப்பு அமைச்சின் 1998 ஆம் ஆண்டு உள் அறிக்கை உள்ளிட்ட மறைக்கப்பட்ட அனைத்து விசாரணை அறிக்கைகளையும், முந்தைய செம்மணி குறித்த விசாரணைகள் தொடர்பான அனைத்து நீதிமன்றச் சமர்ப்பிப்புகளையும் உடனடியாக வெளியிடுவதை வெளிப்படைத்தன்மை தொடர்பான சீர்திருத்தங்கள் உள்ளடக்கியிருக்க வேண்டும். பல பத்தாண்டுகளாக விசாரணை முடிவுகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதும், அதன் விளைவாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதும், எதிர்காலத்தில் ஆதாரங்கள் மறைக்கப்படுவதைத் தடுப்பதற்காகத் தகர்க்கப்பட வேண்டிய நிறுவன ரீதியான நடைமுறைகளை வெளிப்படுத்துகின்றன.

## 6) விரிவான சர்வதேசப் பொறுப்புகள்

பாதிக்கப்பட்ட சமூகங்களைத் தொடர்ச்சியாகப் பாதிக்கும் மனித உரிமை மீறல்களின் விரிவான வடிவங்கள் குறித்துச் சர்வதேசச் சமூகம் கவனம் செலுத்த வேண்டும். ஆவணப்படுத்தப்பட்டுள்ள கண்காணிப்பும், அச்சுறுத்தலும், இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள குடிசார் சமூக அமைப்புகளையும், ஊடகவியலாளர்களையும், மனித உரிமைகளின் பாதுகாவலர்களையும் பாதிக்கும் திட்டமிட்ட, முறைமையான நடைமுறைகளை வெளிப்படுத்துகிறது.[94] பழிவாங்கப்படுவோம் என்ற அச்சமின்றிப் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியைத் தொடர்வதற்கான வெளியை உருவாக்குவதற்குச் சர்வதேச அழுத்தமும், கண்காணிப்பும் அவசியமானவை.

[93] காணாமல் போன நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

[94] அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம், *ஓர் உண்மையான அருவப் பேய்: வடக்கிலும், கிழக்கிலும் தொடரும் கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் கலாச்சாரம்*, பெப்ரவரி 2025, https://adayaalam.org/wp-content/uploads/2025/05/A-Phantom-that-is-Real_-Persisting-Culture-or-Surveilance-and-Intimidation-in-the-NorthEast.pdf எனும் இணைப்பில் கிடைக்கிறது.

மிக முக்கியமாக, செம்மணி விசாரணையானது, பயனுள்ள நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளைச் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் கொண்டுள்ளதா அல்லது வழங்கப்படாது காலவரையின்றி நிறுத்தி வைக்கப்படக்கூடிய அரசின் ஒப்புதலில் அது தங்கியுள்ளதா என்பதற்கான ஓர் பரீட்சை என்பதைச் சர்வதேசச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

# முக்கியமான பரிந்துரைகள்

### சர்வதேசப் பொறுப்புக்கூறல்:

1. குற்றவழக்குத் தொடுக்கும் அதிகாரத்துடன் கூடிய சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதில், மூல மீறல்களில் சம்பந்தப்பட்ட உள்நாட்டு நிறுவனங்கள் உள்ளடக்கப்படக் கூடாது.

2. இராணுவக் கட்டளையிடும் கட்டமைப்பு, புதைக்கப்பட்ட இடங்கள், புதைத்ததன் நடைமுறைகள் என்பன தொடர்பில் சோமரத்ன ராஜபக்ஷவிடமிருந்து விரிவான சாட்சியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

3. தனிப்பட்ட குற்றவாளிகளை மட்டும் விசாரணை செய்வதை விடுத்து, கட்டளைப் பொறுப்பை மையமாகக் கொண்ட விசாரணைகளை ஏற்படுத்த வேண்டும்.

### பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உரிமைகளும், அவர்களுக்கான பாதுகாப்பும்:

4. இச்செய்முறையில், அகழ்வு இடம்பெறும் இடத்திற்கு நேரடியாகச் செல்வதற்கான அனுமதி, உள மற்றும் பண்பாட்டு ரீதியான ஆதரவு என்பவற்றுடன் கூடிய பயனுள்ள குடும்பங்களின் பங்கேற்பை உறுதிசெய்ய வேண்டும்.

5. சர்வதேசக் கண்காணிப்புடன் கூடிய வினைத்திறனுடன் செயற்படும் சாட்சிகளைப் பாதுகாக்கும் பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

6. புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வாழ்பவை உள்ளிட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுடனான திட்டமிட்ட, முறைமையான தமிழ் மொழித் தொடர்பாடல் அமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

7. மீண்டும் மீண்டும் நேர்காணல் செய்வதை விடுத்து, ஏற்கனவே காணப்படும் (இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2003 ஆம் ஆண்டு அறிக்கை உட்பட) ஆவணங்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், குடும்பங்கள் மீளவும் மனக்காயத்திற்கு உட்படுவதைத் தடுக்க வேண்டும். அனைத்து வரலாற்றுப் பதிவுகளையும் திட்டமிட்ட, முறைமையான ரீதியில் எண்மயப்படுத்துதலும் (டிஜிட்டல் மயப்படுத்துதலும்), ஆவணப்படுத்துதலும் இதற்கு உதவும்.

### தொழினுட்ப நியமங்களும், தடயவியல் நியமங்களும்:

8. சர்வதேசக் குற்றவழக்கு நடைமுறை நியமங்களுக்கு அமைய விசாரணைகளை வழிநடத்த உடனடியாகச் சர்வதேசத் தடயவியல் நிபுணத்துவத்தை வழங்க வேண்டும்.

9. சர்வதேசத் தொழினுட்ப உதவியுடன் விரிவான தேசிய டி.என்.ஏ தரவுத்தளம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

10. ஆதாரங்களைப் பாதுகாக்கவும், பகுப்பாய்வு செய்யவும், சர்வதேச அங்கீகாரம் பெற்ற தடயவியல் வசதிகளை விருத்தி செய்ய வேண்டும்.

**உண்மையும், அங்கீகாரமும்:**

11. திட்டமிட்டு, முறைமையாகச் செய்யப்பட்ட சட்டவிரோதக் கொலைகள் செம்மணியில் நிகழ்ந்துள்ளன என்பதையும், அது தொடர்பில் நிறுவன ரீதியான தோல்விகள் இடம்பெற்றுள்ளன என்பதையும் உத்தியோகபூர்வமாக அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்.

12. தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, பரந்துபட்ட வடிவங்களிலான அரச வன்முறைகளை ஒப்புக்கொள்ள வேண்டும்.

13. பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களை மையமாகக் கொண்ட, பொதுவெளியில் இடம்பெறும் உண்மை கண்டறியும் செய்முறைகளை ஏற்படுத்த வேண்டும்.

**கட்டமைப்புச் சீர்திருத்தங்கள்:**

14. (குற்றப் புலனாய்வுத் திணைக்களம், இராணுவப் புலனாய்வுப் பிரிவு போன்ற) மூல மீறல்களில் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடம் இருந்து விசாரணை அதிகாரத்தை நீக்க வேண்டும்.

15. பாதுகாப்புப் படைகளுக்கான சுயாதீன மேற்பார்வைப் பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும்.

16. நிறுவன மாற்றத்தினூடு இச்சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்தும் உத்தரவாதங்களை உருவாக்க வேண்டும்.

**உடனடியாகத் தேவையான நடவடிக்கைகள்:**

17. இடம்பெற்றுவரும் அகழ்வுப் பணிகளுக்கு வானிலையால் ஏற்படும் பாதிப்புகளைத் தாங்கக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அகழ்வுத் தளத்தின் தற்போதைய பாதுகாப்புச் சிக்கல்களை நிவர்த்தி செய்ய வேண்டும்.

18. காலவரையற்ற தாமதங்களைத் தடுப்பதற்காக விசாரணைக் கட்டங்களுக்குத் தெளிவான காலக்கெடுக்களை விதிக்க வேண்டும்.

19. அச்சுறுத்தல்கள் இல்லாதிருப்பதை உறுதி செய்யும் கடப்பாடுகளுக்கு இணங்குவதைச் சர்வதேசக் கண்காணிப்பின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

**தகவல்களை வெளிப்படுத்த வேண்டியதன் உடனடித் தேவைகள்:**

20. செம்மணி, கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பான தற்போதைய மற்றும் கடந்தகால விசாரணைகள் தொடர்பான அனைத்து அறிக்கைகளையும் வெளியிட வேண்டும்.

21. யாழ்ப்பாணத்தில் இருபத்தைந்து நபர்கள் காணாமல் போனதற்குக் காரணமானவர்களை அடையாளம் கண்ட, மறைக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டின் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழுவின் (பந்துல குலதுங்க குழுவின்) அறிக்கையை வெளியிட வேண்டும்.

22. 1999 ஆம் ஆண்டின் செம்மணி அகழ்வுகள் தொடர்பான அனைத்து நீதிமன்றச் சமர்ப்பிப்புகளையும், தடயவியல் அறிக்கைகளையும், விசாரணை ஆவணங்களையும், பகுப்பாக்கம் நீக்கி வெளியிட வேண்டும்.

23. மனிதப் புதைகுழி விசாரணையின் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிட்ட காலவரைகளுக்குள் தானாகவே வெளியிடுவதைக் கோரும் சட்டக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

24. விசாரணையின் நிலை, கண்டுபிடிப்புகள், குடும்பங்களுக்கு அறிவிக்கும் நடைமுறைகள் என்பவற்றுடன் கூடிய எல்லா மனிதப் புதைகுழிகளுக்குமான பொதுத் தரவுத்தளம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

## 5. முடிவுரை

**"என்புக்கூடுகளாகவாவது எமக்கு நீதி கிடைக்காவிட்டால், இந்த நாட்டில் தமிழர்கள் வாழ்வதில் பொருள் ஏதும் இல்லை."**

**காணாமல் போன நபர் ஒருவரின் தாய்**[95]

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, தனது பொறுப்பாணையை ஒப்புக்கொண்டு, நடைமுறைகளைத் தரப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாக்குமூலங்கள் உள்நாட்டுப் பொறிமுறைகள் மீது அவர்களுக்கு இருக்கும் ஆழமான அவநம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. நிறுவன ரீதியான கொள்கைக் கட்டமைப்புகளுக்கும், பாதிக்கப்பட்டவர்களின் நேரடி வாழ்க்கை அனுபவங்களுக்கும் இடையே காணப்படும் இந்த வேறுபாடு, குடும்பங்கள் ஏன் தொடர்ந்து சர்வதேசப் பொறுப்புக்கூறலைக் கோருகின்றன என்பதை விளக்குகிறது.

செம்மணி மனிதப் புதைகுழி பற்றிய முதலாவது வாக்குமூலம் அளிக்கப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்ட போதும், குடும்பங்களின் காத்திருப்புத் தொடர்கிறது. அவர்களின் குரல்கள் இன்றும் தெளிவாகவே உள்ளன. அவர்கள் உண்மையையும், பொறுப்புக்கூறலையும், ஒப்புக்கொண்டு அங்கீகரிப்பதையுமே நாடுகிறார்கள். "*எமது இழப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமே நாங்கள் நீதியைக் கோருகிறோம்.*"[96]

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் திறன் பற்றிய அடிப்படைக் கேள்வி ஒன்று தற்போது சர்வதேசச் சமூகத்தின் முன் எழுந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் பல்லாண்டுக் கோரிக்கைகளுக்கு அது உறுதியான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுடன் பதிலளிக்குமா, அல்லது இலங்கையில் காணப்படும், திட்டமிட்டு முறைமையாகச் செயற்படுத்தப்படும், குற்றம் இழைத்தவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் நிலைமை காலவரையின்றித்

[95] காணாமல் போன நபர் ஒருவரின் தாய் ஒருவர் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025
[96] அரியாலையைச் சேர்ந்த வழக்கறிஞரும், சமூக உறுப்பினருமான கு. ஐங்கரன் உடனான நேர்காணல், ஓகஸ்ட் 2025

தொடர அனுமதிக்கப்படுமா? செம்மணி விவகாரமானது, நீதியை நோக்கிய ஓர் திருப்புமுனையாக அமையலாம் அல்லது நிறுவன ரீதியான தோல்வியின் மற்றொரு அடையாளமாக மாறலாம்.